UNIVERSITY OF JAFFNA
LIBRARY
30 JUL 2012

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 | இதழ்: 08 | பக்கங்கள்: 08 | திகதி 13-05-2012 | விலை: 15.00

# யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் வருடாந்த மாநாடு

**கிறிஸ்தவன் தனக்காக மட்டுமல்ல, தனது சமூகத்திற்காகவும் வாழ வேண்டும் மற்றவன் வாழ வேண்டும் என்று விட்டுக் கொடுத்து வாழும் பொழுது கிறிஸ்தவம் வாழப்படும்.**

பிரதம விருந்தினர்
ஆசிரியர் A.S. அகஸ்ரீன்



**ஆயர், குருக்களின் செட்டைகளைத் தாங்கிச் செல்லும் காற்றாக பொது நிலையினர் செயற்பட வேண்டும்.**

சிறப்பு விருந்தினர்
யாழ் மறை மாவட்ட குருமுதல்வர்

**2ம் வத்திக்கான் சங்கமே பொது நிலையினருக்குரிய நிலையை கோட்பாட்டு ரீதியாக பெற்றுக்கொடுத்தது.**

**இச்சங்கத்தின் 50வது ஆண்டு நிறைவு நினைவு கூரப்பட்டுள்ள இந்த ஆண்டில் பொதுநிலையினர் செயறபாட்டு ரீதியாக அதிக பங்கேற்பை வழங்க முன் வரவேண்டும்.**

இயக்குனர் இரவிச்சந்திரன் அடிகள்

யாழ் மறைமாவட்ட பொதுநிலையினரின் வருடாந்த மாநாடு 29-04-2012 ஞாயிற்றுக்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் கழகத்தின் தலைவர் திரு. அலெக்ஸ் அமலரட்ணம் தலைமையில் இடம் பெற்றது. மறைமாவட்டடத்தில் உள்ள 46 பங்குகளில் இருந்து 183 பொதுநிலை பிரதிநிதிகளுடன் கழகத்தின் செயற்குழு உறுப்பினர்கள் பக்திச்சபைகளின் மறைமாவட்ட அமைப்புக்களின் தலைவர், செயலாளர் மறைக்கோட்ட இணைப்பாளர்களான அருட்பணியாளர்கள் உட்பட சுமார் 230 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். பிரதம விருந்தினராக மறைமாவட்டத்தின் மூத்த பொதுநிலைப் பணியாளரான இளைப்பாறிய ஆசிரியர் திரு A.S. அகஸ்ரின் அவர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். சிறப்பு விருந்தினராக மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து கொணடார்.

இந்நிகழ்வில் பொது நிலையின் தினம் - 2011 தொடர்பான பரிசளிப்பு விழா கழகத்திற்கான புதிய யாப்பு அறிமுகம், சிறப்புத் திருப்பலி, மறைக்கோட்ட செயற்குழுக்கள் தெரிவு

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## போர் நடந்த நாடுகளில் 150 கோடி மக்கள் வாழ்கின்றனர்

ஐ.நா

கடந்த 20க்கு மேற்பட்ட ஆண்டுகளில் உலகில் வன்முறை மிகுந்த கலவரங்கள் குறைந்திருந்தாலும், போர்களால் பாதிக்கபபட்ட நாடுகளில் 150 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர் என்று ஐ.நா.பொதுச் செயலர் பான் கி மூன் கூறினார்.

வாஷிங்டனிலுள்ள, யுக்திகள் மற்றும் சர்வதேச ஆய்வுக்கான நிறுவனத்தில் இவ்வாறு உரையாற்றிய பான் கி மூன், அமைதியைக் கட்டி எழுப்பும் முயற்சி சிக்கலானது. இதற்கு வளர்ச்சியுடன் கூடிய ஒத்துழைப்பு அவசியம் என்று குறிப்பிட்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு தன்னால் இயன்ற அனைத்தையும் ஐ.நா.செய்து வருகின்றது என்றும் கூறிய அவர், ஐ.நா.வின் 16 அமைதிகாக்கும் படைகள் 15 நாடுகளில் பணியாற்றுகின்றன என்பதையும் குறிப்பிட்டார்.

## அருள்பணியாளர்களாகப் பயிற்சி பெறும் அனைவரும் மக்கள் பணியைத் தங்கள் வாழ்வின் மையமாகக் கொண்டிருக்க வேண்டும்

-- திருத்தந்தை 16ம் பெனடிக்ட் --




அருட்பணியாளர்களாகப் பயிற்சி பெறும் அனைவரும் தங்கள் தனிப்பட்ட வளர்ச்சியில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும், மக்கள் பணியைத் தங்கள் வாழ்வின் மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார்.

உரோம் நகரில் உள்ள ஸ்பானிய பாப்பிறைக் கல்லூரி தனது 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையொட்டி, அக்கல்லூரியின் நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய 150பேர் கொண்ட குழுவைத் திருப்பீடத்தில் கடந்த வாரம் சந்தித்த போது திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

ஸ்பானிய மறைமாவட்டக் குருக்களின் பாதுகாவலராகிய புனித அவிலா நகர் ஜான் அவர்களின் திருநாளன்று இக்கல்லூரியின் உறுப்பினர்களைச் சந்திப்பது தனக்குப் பெரும் மகிழ்வைத் தருகிறது என்று கூறிய திருத்தந்தை, புனித அவிலா ஜான் திருஅவையின் மறைவல்லுனராக விரைவில் உயர்த்தப்பட உள்ளார் எனறும் கூறினார்.

## வேளாங்கண்ணி திருத்தலத்தில் மரியன்னை மாநாடு!

வரும் யூன் 15, 16, 17 ஆகிய திகதிகளில் வேளாங்கண்ணி திருத்தல பொன் விழாவையொட்டி அன்னை மரியா மாநாடு நடைபெற உள்ளது. இம்மாநாட்டில் தமிழகத்தின் அனைத்து மறை மாவட்டங்களிலிருந்தும் மறை மாவட்டத்திற்கு 15பேர்வீதமும் தஞ்சை மறைமாவட்டத்தின் 88பங்குகளிலிருந்து 88பேரும்



கலந்துகொள்ள உள்ளனர். இந்த அன்னை மரியா மாநாட்டைப் பேராயர் ஏம்.எம். சின்னப்பா ச.ச. ஆரம்பித்து வைத்து தலைமை தாக்குகிறார். ஆயர் சூசைமாணிக்கம் முதல் நாள் நெறியாளராகவும், ஆயர் அந்தோனிசாமி 2ம் நாள் நெறியாளராகவும் வழி நடத்தவுள்ளனர். இம்மாநாடு தஞ்சை ஆயர் தேவதாஸ் அம்புறோஸ் முன்னிலையில் நடைபெறும். இம்மாநாட்டில் தந்தை குருஸ் ஏரோணிமுஸ் (விவிலியத்தில் மரியா) தந்தை பன்னீர்ச்செல்வம் (திருச்சபை வரலாற்றில மரியா) தந்தை அல்போன்ஸ் (மரியியல் புதிய இறையியல் பார்வை) தந்தை மதுரை ஆனந்த் (மரியா ஆன்மீகம்) மற்றும் தந்தை அமுதன் (வேளாங்கண்ணி அன்னை மரியா நேற்றும் - இன்றும்) என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றவுள்ளனர்.

## உலகெங்கும் பரவியுள்ள இயேசு சபையினரின் எண்ணிக்கை

உலகெங்கும் பணியாற்றும் இயேசு சபையினரின் எண்ணிக்கை 2012ம் ஆண்டு ஜனவரி முதல் திகதியன்று 17 637ஆக இருந்தது. என்று இயேசு சபையின் தலைமையகம் அறிவித்துள்ளது. கடந்த கிழமை வெளியான இந்த புள்ளிவிபரங்களின்படி இயேசு சபையின் இவ்வாண்டுத் தொடக்கத்தில் 12 526 குருக்கள், 1470 அருட்சகோதரர்கள் என்றும் குருத்துவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளோர் 2896பேர் மற்றும் 745பேர் துறவுவாழ்வில் புதிதாக

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## தம்புள்ளை பள்ளிவாசல் தாக்குதலை கண்டித்து யாழ் கத்தோலிக்க பொதுநிலையினர் மாநாட்டில் தீர்மானம்

யாழ், முல்லை, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கும், யாழ் மறைமாவட்டம் முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுநிலையினர் கழகத்தின் ஆண்டு மாநாட்டில் கூடியிருந்த 250 கத்தோலிக்கர்களாகிய நாம் அண்மையில் தம்புள்ளையில் முஸ்லீம் சகோதரர்களின் பழமை வாய்ந்த தொழுகைப்பள்ளி வாசலில் வேறு மதத்தவரால் நடத்தப்பட்ட அடாவடித்தனத்தையும், அச்சுறுத்தல்களையும்,அங்குள்ள பழைய இந்து ஆலயத்திற்கும் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களையும் ஆழமாகக் கண்டிக்கிறோம். இவற்றுக்கு மத, அரசியல் தலைவர்களின் தூண்டுதலும் ஆதரவும் இருந்ததை அறிந்து வேதனைப் படுகின்றோம்.

எம் நாட்டில் இப்படியான இன, மத அடிப்படையிலான குரோதங்களையும், பிழவுகளையும், நீதிக்கு முரணான தீவிரவாதத்தையும் வேரோடு அறுத்தொழிக்க தீவிரமாக உழைக்க ஆட்சியாளர்களையும், சமயத் தலைவர்களையும், அமைதி சார்ந்த சமூகப் பெரியவர்களையும் வேண்டுகின்றோம்.

## லொறட்டோ இல்லம் திறப்பு விழா

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் ஊர்காவற்றுறை திருக்குடும்பக் கன்னியர் வதிவிட மாணவிகளுக்காக வழங்கப்பட்ட புதிய விடுதியான லொறட்டோ இல்ல மண்டப திறப்பு விழா இயக்குனர் தந்தை பேனாட் றெக்னோ தலைமையில் குருமுதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரால் 12-05-2012 அன்று திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திருமதி அன்ரன் யோகநாதன் சி.ஜி.ஜெயக்குமார் அடிகள், அருட்சகோதரி யோலன்ட், கிராம மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

## எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.

# புண்படும் பண்பாடு

முப்பது வருட யுத்தம் முடிவுக்கு வந்து முட்கம்பி வேலிக்குள் முனகி முடங்கி கிடந்து மெல்ல மெல்ல மூச்சிழுக்கத் தொடங்கியுள்ளது தமிழ் இனம்.

அபிவிருத்திப் பாதையில் மெல்ல அடியெடுத்து சுபீட்சமான எதிர்காலம் நோக்கி மெல்ல அசைகிறது எமது வாழ்வியக்கம். போரின் வடுக்களைச் சுமந்து கறைபடிந்த அத்தியாயங்களுடன் எலும்புக் கூடுகளின் மத்தியில் அஸ்தமனத்திலும் உதயம் காண உருவேறி உலா வருகிறது தமிழர் உள்ளம்.

எல்லாம் நல்லபடி முடிந்து விட்டது என எம்மால் ஏப்பம் விட முடியாது. மீண்டும் முகவரி தொலைத்து விட முனைகிறது நமது சமூகம். சடங்குகளும், சம்பிரதாயங்களும், வழிபாடுகளும் கேலிக்குரிய கேளிக்கைகளாக சமூகச் சந்திகளில் அரங்கேறி வருகின்றன.

மரண ஊர்வலங்கள் திருமண ஊர்வலம் போல ஆடம்பரமாக அமைவதைப் பார்க்கின்றோம். உயிருடன் இருக்கும் போது ஒரு கிண்ணம் தண்ணீர் வழங்க முடியாதவர்கள், நோய்ப்படுக்கையில் அருவருத்து வெறுக்கும் உறவுகள், முதியோர் இல்லங்களிலும் அனாதை மடங்களிலும் பெற்றோரை தவிக்க விடும் பிள்ளைகள் அப்பெற்றோர்களுக்கு மரணம் ஏற்படும் போது பத்திரிகைகளில் அரைப்பக்கத்திற்கு மரண அறிவித்தல்கள் வழங்கியும், முச்சக்கர வண்டியில் ஊர் உறங்கிய பின்னர் இலண்டன், கனடா, பிரான்ஸ் என பிள்ளைகள் தொட்டு பூட்டப்பிள்ளைகள் வாழும் இடங்களை மரணப்பிரச்சாரம் செய்வதும், பிரமாண்டமான மரண ஊர்வலங்கள், பிரமாதமான விருந்துபசாரங்கள் நிகழ்த்தியும் ஆன்ம சாந்திக்காக அவதிப்படுகின்றனர்.

"பான்ட்" வாத்திய கருவிகள் முழங்க வெடியோசைகள் காதைப் பிளக்க அதிர்ச்சியில் இறந்தவரே உயிர்க்கும் அளவிற்கு வீதியால் செல்லும் மரண ஊர்வலங்களிற்கும், விழாக்களிற்கு செல்லும் ஊர்திப் பவனிகளுக்கும் வேறுபாடு தெரியாமல் பரிதவிக்க வேண்டியுள்ளது. மௌனப் பிரார்த்தனைகளுடன், தெய்வீகக் கீதங்களுடன் அமைதியாக எளிமையாக மண்ணில் வாழ்ந்து விண்ணே செல்லும் நண்பனுக்கு விடைகொடுத்த நிலை மாறி வீடியோ கமறாக்கள் சகிதம் மரணச் சடங்குகள் நவயுகப் பாணியில் நர்த்தனம் புரிவது நமது கலாசார பண்பாட்டு பிறழ்வின் உச்சநிலையாகும். மேலும் மரண ஊர்வலத்தில் நடனமாடும் கலாசாரமும் தமிழக சினிமா வாயிலாக நம் சமூகத்திலும் மெல்லத் தலைகாட்ட தொடங்கியுள்ளமையும் மனவேதனைக்குரியதாகும்.

ஆள்பாதி ஆடைபாதி என்ற நிலைக்கு இன்று ஆலயங்களும் தப்பவில்லை. பக்தி மார்க்கத்தின் பரவச நிலையைத் தொடும் ஆலய வழிபாடுகளுக்கு ஒரு சிலர் அணிந்து வரும் ஆடை அணிகலன்கள் பக்தியின் பாதையை மாற்றும் அளவிற்கு, வழிபாட்டிற்கு வருகின்ற ஆன்மாக்களை அலைக்கழிக்கும் அளவிற்கும் அலங்கோலமாக அமைவதனை இன்றைய காலகட்டத்தில் நோக்க முடிகின்றது. குளியலறைக்குப் போவது போன்ற ஆடைகளுடன் இறைவன் வீற்றிருக்கும் ஆலய சந்நிதானங்களில் பலர் தரும் காட்சிகள் ஆலயங்களின் உன்னத மாண்பையே மறைத்து வருகின்றன. தனி மனித சுதந்திரம் என்ற பெயரில் ஏனையோரின் சுதந்திரங்கள் பாதிக்கப்படாது வாழ்வதே மனித விழுமியப் பண்பு என்பதை குறிப்பிட்ட சிலர் உணர்ந்தே ஆகவேண்டும்.

கைத்தொலைபேசிகள் பல்லிசையோடு வழிபாட்டுத் தலங்களில் ஒலிக்க, திருப்பலிக் கீதம் இசைக்கப்படுகின்றது என எண்ணி பலர் எழுந்தும் விடுகின்றனர். ஆலயத் திருவிழாக்களிலும், பண்டிகைக் காலங்களிலும் சந்திகளிலும், வீதி யோரங்களிலும் ஒலிபெருக்கியில் பாடல்களை இசைக்க விட்டு புழுக் களைப் போல் நெளிந்து ஆடுவது பலரது இயல்பான வாழ்வை பாதிக்கின்றது. வழி பாட்டைத் திசை திருப்பும் அல்லது இடையூறும் செய்யும் இத்தகைய செயற்பாடுகள் அநாகரிகமானவை என்பதை பலர் உணரத் தவறி விடுகின்றனர்.

தமிழர் தம் பண்பாடு என்றுமே தனித்துவம் பேணப்பட்டு வந்தது. உலக அரங்குகளில் பெருமையாக பேசப்பட்டும் வந்தது. இதற்கு சாவுமணி அடித்தாற் போல் இன்றைய காலகட்டத்தில் எமது பண்பாடுகள் புண்படுவதை எப்பக்கம் திரும்பினும் பார்க்க முடிகின்றது. பூக்களை மிதித்துக் கொண்டு கிளைகளுக்கு வர்ணம் பூசும் செயற்பாடுகளை எம் மத்தியில் இருந்து நீக்குவோம் ஆயின் மீண்டும் எமது பண்பாடுகள் பேணப்படுவதுடன் எமது வழிபாடுகளும், செயற்பாடுகளும் புனிதம் பெறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**

# பருத்தித்துறை மறைக்கோட்ட பொதுநிலையினரின் உயிர்ப்பு விழா மகிழ்வுப் பயணம்

இயேசுவின் பாடுகள், மரணம் உயிர்ப்பினை தியானித்த மக்களுக்கு ஓர் மகிழ்ச்சி பயணமாக மடுத் திருத்தலம் நோக்கிய இப் பயணம் அமைந்திருந்தது. பருத்தித்துறை மறைக் கோட்டத்தைச் சேர்ந்த பங்குகளில் இருந்து வருகை தந்திருந்த சுமார் ஐம்பத்தைந்து பொதுநிலையினர், மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. மௌலிஸ் அடிகளாரின் தலைமையில், திருவாளர் வின்சன்டி போல் நெறிப்படுத்தலில் கலந்து கொண்டனர். இம் மக்கள் வவுனியாவில் உள்ள கல்வாரித்திருத தலம், மருதமடு அன்னையின் திருத்தலம், என்பவற்றினை தரிசித்து இறை ஆசீர் பெற்றுக்கொண்டனர். அருட்பணி. ஜேம்ஸ்நாதன் தலைமையில் மடுத்திருத் தலத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்து அன்னையின் ஆசீர் பெற்றுக்கொண்டனர். மேலும் மன்னார் வேதசாட்சிகள் ஆலயம் அமைந்துள்ள தோட்ட வெளி, பேசாலை வெற்றி நாயகி ஆலயம், தூய செபஸ்தியார் ஆலயம் ஆகிய ஆலயங்களையும் தரிசித்து தமது இருநாள் மகிழ்வு பயணத்தினை நிறைவு செய்தனர்.

# குழந்தைகளை கிறிஸ்தவ வாழ்வில் வளர்ப்பது பற்றிய கருத்தரங்கு

ஐரோப்பாவின் பல நாடுகளில் மறைக் கல்விப் பணியில் ஈடுபட்டுள்ளோர் கலந்துகொள்ளும் ஒரு கருத்தரங்கு உரோம் நகரில் கடந்த வாரம் நடைபெற்றது.

"புதிய நற்செய்திப் பணி என்ற கண்ணோட்டத்தில் கிறிஸ்தவ வாழ்வின் துவக்கம்" என்ற தலைப்பில் நடைபெறும் இந்த 12வது ஐரோப்பிய கருத்தரங்கில் 7 முதல் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளை கிறிஸ்தவ வாழ்வில் வளர்ப்பது பற்றிய எண்ணங்கள் பரிமாறப் படுகின்றன.

இரண்டாம் வத்திகான் பேரவையின் ஐம்பதாம் ஆண்டு திருஅவை மறைக்கல்வி நூலை வெளியிட்ட இருபதாம் ஆண்டு வருகிற அக்டோபர் மாதம் திருஅவை துவக்க உள்ள விசுவாச ஆண்டு ஆகியனைத்தையும் ஒருங்கிணைத்து சிறப்பிக்கும் வண்ணம் இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

கடந்த வாரம் புனித மரியா பசிலிக்காப் பேராலயத்தில் கர்தினால் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் இக்கருத்தரங்கில் பங்கேற்ற அனைவரும் கலந்து கொண்டனர்.

# சிரியாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருத்தந்தை ஒரு இலட்சம் டாலர் உதவி

சிரியாவில், குறிப்பாக ஹோம்ஸ் மற்றும் அலெப்போ நகரங்களில் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு, அந்நாட்டுக் கத்தோலிக்கத் திருஅவை, கரித்தாஸ் பிறரன்பு நிறுவனம் வழியாகப் பல்வேறு மனிதாபிமான உதவிகளைச் செய்து வரும் வேளை, திருத்தந்தையும் அத்தலத்திருஅவையின் பணிகளுக்கென வத்திக்கான் 'கோர் உனும்' எனும் பிறரன்பு அவை மூலம் ஒரு இலட்சம் டாலரை வழங்குகிறார் என்று அந்த அவை அறிவித்தது. சிரியா நாட்டில் வன்முறை முடிவுக்கு வரவும், பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சண்டையிடும் தரப்பினர் உரையாடல் மூலம் அமைதி மற்றும் ஒப்புரவுப் பாதையில் செல்லுமாறும் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகிறார். துன்புறும் மக்களுக்காகச் செபிப்பதாகவும் அவர் கூறி வருவது குறிப்பிடத்தக்கது. சிரியாவில் ஏறக்குறைய ஓராண்டளவாக நடைபெற்று வரும் சண்டையில் குறைந்தது 9,000 பேர் இறந்துள்ளனர்.

## அன்னையர் தின காணிக்கை

ஈரைந்து மாதங்கள்
என்னை நீ சுமந்தாய்
அன்னையே,இன்றைக்கும்
உன் மடிதான் சொர்க்கம்
மண்ணுலகிலே!
உன் உயிரை
ஊனாக்கி ஊட்டி
என் உடலை வளர்த்தாய்,
உலகையே தந்தாலும்
உன் அன்பிற்கு
அது ஈடாகுமோ!
நடை பயில,
நல்லவை நான் அறிய
கற்றுக் கொடுத்தாய்,
நானிந்த உலகிலே
நல் மனிதனாய் வாழ
வழியமைத்தாய்!

# சாவகச்சேரி புனித சூசையப்பரின் திருவிழா

சாவகச்சேரி செய்தியாளர் - J.M.B. மரியதர்சினி

தொழிலாளர்களின் தந்தையாம் புனித சூசையப்பரின் திருவிழா சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய சூசையப்பர் பந்தியினராலும், பங்கு மக்களாலும் வெகு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. காலைத் திருப்பலி 7.00 மணிக்கு எமது பங்குத் தந்தை அருட்பணி. யோ. பிரான்சிஸ் அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து புனித சூசையபபர் சுரூபம் பவனியாக கடற்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு படகில் பவனியாக எடுத்து வரப்பட்டு திருச்சுருப ஆசீர் நிறைவேற்றப் பட்டது. அதன்பின் அன்னதானம் வழங்கப்பட்டது. அதன் பின் படகுப் போட்டி நடைபெற்று வெற்றியாளருக்கு பரிசிலும் வழங்கப் பட்டது.

பங்குத் தந்தையின் வழிநடத்தலிலும் சூசையப்பர் பந்தி, பங்கு மக்கள் அனைவரின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் இவ்விழா சிறப்புற இனிதே நிறைவுற்றது.

## தேசிய மறையாசிரியர் தேர்வு – 2012

மேற்படி இத்தேர்வானது கார்த்திகை மாதம் 17ம் நாளில் நடைபெறவுள்ளது. இத்தேர்வில் தோற்றவுள்ள பரீட்சாத்திகள் தங்கள் பெயர்களை உங்கள் பங்குத்தந்தையிடம் வைகாசி மாதம் 31ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.

நன்றி

இயக்குநர்
மறைக்கல்வி நடுநிலையம் - யாழ்ப்பாணம்.

# சரா ஓர் அபூர்வ பிறவி நீ!

**அருட்பணி. கி.யோ. ஜெயக்குமார்**



வாழ்க்கையில் பலருடன் பழகும் சந்தர்ப்பங்கள் நிறையவுண்டு. ஆனால் ஒரு சிலர் மட்டும் ஏன் மனித மனங்களில் நீடித்த இடம் பெறுகின்றனர். அதிலும் வியப்பு எதுவெனில் அவர்களில் சிலர் பழகிய குறுகிய காலத்திலேயே சாவை சந்தித்து விடுகின்றார்கள் என்பது தான். அவர்கள் மனங்களில் இடம் பெறுவதற்கு அவர்களிடமிருந்த அபூர்வ பண்புகள், அவர்களின் காலத்திற்கு முந்தைய மரணம் காரணமாக அமையுமா?

சராவிடமிருந்த அபூர்வ பண்புகள் பற்றி எழுதுவதற்கு முன்பு சரா சவேரியார் குருத்துவக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் இருந்தே சராவை நன்கு எனக்கு தெரியும். என்னிடம் கல்வி கற்றவன் என்ற வகையில் ஒரு மாணவனாக இருக்கும் போதே சரா எந்த விடயத்தையும் கவனமாக Serious ஆக, பொறுப்பாக எடுத்து செயல்படுவதை அவதானித்துள்ளேன். மற்ற மாணவர்கள் பகிடி கேலி செய்து கலகலப்பாக இருக்கும் போது சரா படிக்கும் காலத்திலேயே எல்லாவற் றையும் கவனமாக, நிதானமாக செய்யும் பண்பு கொண்ட ஒரு மாணவனாகவே இருந்துள்ளார். சராவின் மனம் போல் உடலும் பெரிதாக இருந்தது. மாணவர்களின் வழமையான கேலிகள் பகிடிவிட்டு சரா விதி விலக்கல்ல. ஆனாலும் அதைப் பொருட்படுத்தி அதை ஒரு விடயமாக்கி கோபித்து சினக்கும் அளவிற்கு சரா மனதில் முதிர்ச்சியடையாதவர் அல்ல. சிரித்து விட்டு தன் வழமையான பாணியில் செயல்படும் பண்பு அபூர்வம் இல்லையா! தன்னைப்பற்றிய உயர்ந்த எண்ணம் ஆளுமை கொண்ட மனிதன் மற்றையவர்களின் வசைச்சொற்கள், கேலிகள் என்பவற்றை பெரிதுபடுத்த மாட்டார்கள்.

குருமட மாணவ பராயத்திற்கு பின்பு சராவினுடைய சந்திப்பு வன்னியில் மீண்டும் புதுப்பிக்கப்படுன்றது. வன்னியில் சராவினுடைய சந்திப்பானது ஒரு சக குரு என்ற அந்தஸ்தில் மட்டுமல்ல, எனது பணிக்கும் சரா JRSல் இருந்து மேற்கொண்ட பணிக்குமிடையில் ஒரு ஒற்றுமை. அதனால் எமக்கிடையே ஏற்பட்ட அனுபவ பகிர்வுகள், கருத்துப் பரிமாறல்கள் எம் உறவை ஆழமாக்கியது. சரா எனக்கு வயதில் குறைந்தவராக இருந்தாலும் எனது சொந்த வாழ்விற்கு சரா சில மாதிரிகளை பதித்திருக்கின்றார். சரா ஒரு போதும் தனது நலனை முன்னிலைப்படுத்தியது கிடையாது. ஓய்வின்றி மக்கட்காக குறிபபாக ஏழைகட்காக தன்னை ஆகுதியாக்கினார் என்பது தான் உண்மை ஒரு விதத்தில் ஓய்வின்றி கடின உழைப்புடன் இருந்ததினால் சாவு அவரை காலத்திற்கு முந்தியே இறைவன் சன்னிதானத்திற்கு அழைத்ததா?

சரா சரியானது என்று எதை கருதுகின்றாரோ அதை நேரடியாகக் கூறும் பண்புடையவர். பதவியை, வசதிகளை எதிர்நோக்காது ஏழைகட்காக வாழும் அபூர்வ பண்பு என் வாழ்விற்கு ஒரு மாதிரி என்று கூறலாம். எனக்கு மட்டுமல்ல மற்ற சக குருக்களுக்கும் பயன்படும் என்பது என் எண்ணம்.

சராவின் வாழ்வில் பணியில் ஒரு சுயநல நிகழ்ச்சி நிரல் இருந்ததாக என் மனதில் இன்றுவரை காணவில்லை. மனிதரில் பலர் பணிபுரியும் பொழுது சில நிகழ்ச்சி நிரல்களை முன்னிலைப்படுத்தியே பணி புரிவது மனித வரலாற்றில் புதிதல்ல. இதற்கு எவரும் விதிவிலக்கு அல்ல. ஆனால் சரா இந்தப் பண்பு இல்லாத ஏழைகளை முன்னிலைப்படுத்திய நிகழ்ச்சி நிரலுடன் பணிபுரிந்த ஒரு அபூர்வ மனிதன்.

சராவின் பணி பங்குத்தளத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. JRS இயேசு அவை அகதிகள் பணியகத்தின் வன்னிப்பிராந்திய இணைப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார். எனவே அவரின் பணி, அனுபவம் விரிந்து சென்றது. JRSன் வன்னி இணைப் பாளராக பணி புரிந்ததினால் அவர் பல அபிவிருத்தி திட்டங்கட்கு பொறுப்பாக இருந்தார். அபிவிருத்தி திட்டங்கள் காரணமாக பல இலட்சம் ரூபாய்களை மக்கள பணிக்காக அவர் செலவு செய்தார். ஆனால் அவரின் வாழ்வு சில சமயம் அடிப்படை வசதிகளைக் கூட இல்லாமல் எளிமையான ஒரு வாழ்வாக இருந்துள்ளது. இது இவரின் அபூர்வ பண்பைக் காட்டும் இன்னொரு சுட்டியாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக சராவின் அபூர்வப் பண்பு மெதுமையான இரக்கம் கொண்ட, மற்றவர்களின் துன்பத்தில் தான் துவண்டு போகும் பண்பு. மற்றவர்கள் துன்பப்படுவதை சராவால் தாங்கமுடியாது. துன்பப்படுபவர்களை விட தான் அதிகம வேதனை அனுபவிப்பது சராவின் பண்பு. வன்னியில் குறிப்பாக வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் கொடூரச் சாவுகளின் அனுபவம் சராவின் இறுதி அத்தியாயத்திற்கு பெரும் பங்காற்றியிருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உடல் வலுவின்மையைவிட உள்ளத்தின் சுமை, வேதனை அவரின் சாவிற்கு வழி வகுத்தது. மற்றவர்களின் துன்பத்தில் சாவில் இன்பம் காணும் சுயநல உலகில், மற்றவர்களின் துன்பக்கண்ணீரில் மனம் வெதும்பி தன்னுயிரைக் கொடுத்ததினால் சரா ஒரு அபூர்வப் பிறவி தான். அபூர்வ பிறவி என்பது மற்றவர்களிடம் பொதுவாக காணப்படும் பண்புகளை விட வித்தியாசமான பண்புகளுடன் வாழ்வது சராவின் வாழ்வில் நான் கண்ட அனுபவம். இறுதியாக சராவை 2009 தை மாதம் 9ம் திகதி சந்தித்தேன். சோர்ந்து களைத்து காணப்பட்டார். ஓய்வு தேவை என்றேன். மக்கள் இப்போது படும் துன்பத்தில் இருந்து எப்படி நான் ஓய்வு எடுப்பது என்பது தான் பதில். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. சரா உனக்கு நிரந்தர ஓய்வு தந்து இறைவன் அழைத்து விட்டாரா?

## துணுக்குச் செய்திகள்

- அமெரிக்கக் கத்தோலிக்கத் திருஅவை உருவாக்கியுள்ள 'கருவில் வளரும் குழந்தைக்கு ஆசீர் வழங்கும் வழிமுறை" (ரைட் ஃபார் தி ப்ளெஸ்ஸிங் ஆஃப் ஏ சைல்ட் இன் தி வூம்ப்) என்ற செபங்களுக்கு வத்திக்கானின் திருவழிபாட்டுத் திருப்பேராயம் ஒப்புதல் அளித்துள்ளது.
- திருத்தந்தை 16ம் பெனடிக்ட் மெக்சிகோ நாட்டுக்குத் திருப்பயணம் மேற்கொண்டு திரும்பிய ஓரிரு நாட்களுக்குள், அந்நாட்டு செனட் அவை, சமயச் சுதந்திரத்திற்கு ஆதரவாக நடவடிக்கை எடுத்துள்ளது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆலயங்களுக்கு வெளியே அரசின் முன் அனுமதியின்றி சமயக் குழுக்கள் வழிபாடுகளை நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டுள்ளன.
- அமெரிக்க ஐக்கிய நாட்டில் கொண்டு வரப்பட்டுள்ள கருத்தடைக்குச் சார்பான விதிமுறை போன்ற அண்மை அச்சுறுத்தல்களுக்கு எதிராக, சமயச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்தில், நாடு தழுவிய செப பக்தி முயற்சி ஒன்றை அறிவித்துள்ளனர் அந்நாட்டு ஆயர்கள்.
- சிரியாவின் ஹோம்ஸ் நகரில் பணிபுரியும் இயேசு சபைத் துறவிகள், தாங்கள் தொடர்ந்து அந்நகரில் தங்கி, தங்களால் இயன்றவரை அம்மக்களுக்கு உதவிகளையும் ஆறுதலையும் வழங்கவிருப்பதாக அறிவித்துள்ளனர்.
- அரபு நாடுகளில், குறிப்பாக சவுதி அரேபியாவில் வீட்டு வேலை செய்யும் பிலிப்பைன்ஸ் நாட்டவரில் 70 விழுக்காட்டினர் உடல் மற்றும் மனரீதியான வன்முறைகளால துன்புறுகின்றனர் என்று வெளிநாட்டுப் பணியாளர்கள் நலவாழ்வு குழு மேற்கொண்ட ஆய்வு கூறுகிறது.
- உணவுத் தேவை அதிகரிப்பு, சக்தி, கழிவகற்றல் ஆகியவற்றின் தேவை அதிகரிப்பின் காரணமாக நீரின் தேவையும் அதிகரித்துள்ளதால், நீர் சேமிப்பு என்பது ஓர் உலகச் சவாலாக தற்போது மாறியுள்ளதாக உலக நீர் மன்றம் கூறியுள்ளது. ஐ.நா.வின் 2015ம் ஆண்டிற்கான அபிவிருத்தி இலக்குகள் கூற்றின்படி, 250கோடிக்கும் அதிகமான மக்களுக்கு இன்னமும் ஒழுங்கான கழிவகற்றல் வசதிகள் இல்லை, 10 நபர்களில் ஒருவருக்கு நல்ல குடிநீருக்கான வாய்ப்பும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.
- உலகில் ஒவ்வோர் ஆண்டும் முப்பது வயதுக்கு மேற்பட்ட ஐம்பது இலட்சம் பேர் புகையிலை தொடர்புடைய நோய்களால் இறக்கின்றனர் என்று ஐ.நா. நலவாழ்வு நிறுவனம் வெளியிட்ட புதிய அறிக்கை கூறுகின்றது.
- உலகில் சுமார் 8 இலட்சம் சிறுவர்கள் நாட்கணக்கில் வேலை செய்வதோடு, இளம் வயதில் தாங்க முடியாத அனைத்து விதமான துன்பங்களையும் எதிர்கொள்கின்றனர் என்று மத்ரித் சிறுவர் அமைப்பு கூறுகிறது.
- ஐ.நா.போதைப்பொருள் மற்றும் குற்றப்பிரிவு அலுவலகத்தின் (யுஎன்ஓடிசி) கணிப்புப்படி, உலகில் சுமார் 24 இலட்சம் பேர் மனித வியாபாரத்திற்குப் பலியாகியுள்ளனர். இவர்களில் 80 விழுக்காட்டினர் பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தப்படுகின்றனர். இவ்வியாபாரத்தால் குற்றக் கும்பல்களுக்கு ஆண்டுக்கு 3,200கோடி டாலர் வருவாய் கிடைக்கிறது என்று தெரிய வருகிறது.
- உலகில் ஜனநாயகத்தை மேம்படுத்தும் இயக்கமான 'இன்டர் பார்லிமென்ட் யு'னியன்' வெளியிட்டுள்ள ஓர் ஆய்வறிக்கையில், அரசியலில் பெண்களின் பங்கேற்பு குறித்த பட்டியலில், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா 105வது இடத்தில் உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.
- 2012ம் ஆண்டில் ஏறத்தாழ 90 இலட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டதில், 14 இலட்சம் பேர் உயிரிழந்தனர். இதில் 95 விழுக்காட்டு இறப்புகள் வளரும் நாடுகளில் இடம்பெற்றன.
- ஜப்பான் நாட்டில் பயன்படுத்தப்பட்ட 54 அணுசக்தி நிலையங்களில், ஒரே ஒரு நிலையம் மட்டுமே தற்போது இயங்கி வருகிறதென்றும், இந்நிலையமும் மே மாதம் மூடப்படவுள்ளது என்றும் ஆசியச் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.


விண்ணக வாழ்வில்

3ம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர் செல்வரட்ணம் வளர்மதி

அன்னை மடியில் 05.10.1966

விண்ணக வாழ்வில் 15.05.2009

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"

இரணை மாதா நகர், முழங்காவில்

நீங்கா நினைவுகளில் கணவர், பிள்ளைகள், உற்றார் உறவினர், நண்பர்கள்

Add-51/12



8ம் ஆண்டு நினைவஞ்சலி

S.A.E. இரட்ணராஜா



பிறப்பு 27-05-1935

இறப்பு 20-05-2004

குடும்பத்தில் சுடர் ஒளியாய்
சேவைதனில் ஓர் ஆசானாய்
ஊரினில் கலைவித்தகனாய் வாழ்ந்து
இறைபதமடைந்து தூயவரானீர்
இறைஞ்சுகின்றோம் உமக்காக!

இவரது அன்பில் நிலைத்திருக்கும்
மனைவி, திருமதி இ. இரட்ணராஜா,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கரம்பொன். Add-50/12



விண்ணக வாழ்வின் 3ம் ஆண்டு



திருமதி. அன்ரலீனா வின்சன் விஜயதாஸ்
பிறப்பு: 04-11-1971



செல்வி. வி. திவ்வியா
பிறப்பு: 11-06-2001



செல்வன். வி. அனோஜன்
பிறப்பு: 10-03 2005

இறப்பு 08-05-2009

"ஆண்டவரை உம் புகலிடமாய் கொண்டீர் உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர்" (தி.பா. 91:9)

முகவரி: சிலாவத்தை முல்லைத்தீவு

பிரிவுத்துயரில் வாடும் குடும்பத்தினர்

Add-52/12

# மாணாக்கரும் நீங்களும்

மக்களும் நண்பர்களும் சூழவுள்ள சூழலில் தான் நாம் எப்போதும் வாழ்ந்து வருகிறோம். பள்ளியிலும், கல்லூரியிலும் ஆயிரக்கணக்கான மாணாக்கர்கள் நம்முடன் உறவாடுகிறார்கள்.

இத்தகைய உறவாடல்களில், ஒவ்வொருவருக்கும் நீங்கள் இயன்ற வகையில் உதவி செய்தல் வேண்டும். குறிப்பாக நலிவுற்றோர், விரக்தியுற்றோர், புறக்கணிக்கப்பட்டோர் ஆகியோருக்கு உதவிபுரிய வேண்டும். ஏழைகள் என்பதற்காக எவரையேனும் எள்ளி நகையாடுவதோ, உடல் ஊனமுற்றவர், பிறவிக்குறை உடையவர் என்பதற்காக இழிபடுத்துவதோ தவறான செயல். ஒவ்வொருவரும் உங்களிலே ஒரு நல்ல நணபரைக் கணடு கொள்ளட்டும்.

பொறாமை, ஐயுறவு, சினம் முதலிய எல்லாத் தகுணங்களையும் வேருடன் களைந்து விடுங்கள்; அவை எதிர் மறை மதிப்புகள்; அறவே அகற்ற வேண்டியவை.

எவரைப் பற்றியும் கோள் மூட்டாதீர்கள். அடுத்த வரைத் தீர்ப்பிடாதீர்கள். அவதூறு பேசுவதை, பிறரது குறைகளை மெய்யாகவோ, கற்பனையாகவோ பேசுவதைத் தவிர்த்து விடுங்கள்.

பழகும் குழுவினருள் ஒருவர் உரையாடிக் கொண்டிருக்கும்பொழுது அபத்தமான அல்லது அசிங்கமான முறையில் பேச முயன்றால், அவரது பேச்சை மாற்ற முயலுங்கள். முடியாவிட்டால் அந்த இடத்தை விட்டு உடனடியாகக் கலைந்து விலகிப் போய்விடுங்கள்.

உங்களுடைய நற்பெயர், பெருமை, பண்புநலம், ஆகியவற்றைத் துணிச்சலாகவும் தன்னியல்பான முறையிலும் பாதுகாத்துக்கொள்ளுங்கள். உங்கள் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படாதவாறு எச்சரிக்கையாக இருங்கள். நல்ல பெயரெடுப்பதிலும், அதனைத் தற்காத்துக் கொள்வதிலும் மகளீர் விழிப்பாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் பேச்சும், நடத்தையும், அறிவும், சாதுரியமும் உள்ளதாக இருக்கட்டும். சொல்லாலோ செயலாலோ மற்றவர்கள் விரித்த வலைக்குள் சிக்கிக்கொள்ள வேண்டாம். நீங்கள் உண்மையிலேயே நல்லவராக இருந்தால், நமது நற்



பண்பின் வலிமையைச் சோதித்து அறிபவர் நம்மைச் சுற்றி எவரேனும் இருப்பார்கள் என்பது உறுதி. உங்களது தீர்மானத்தில் உறுதியாக இருங்கள், தவறுக்கு இடம் கொடுக்காதீர்கள்.

ஐயத்திற்கு இடமான நடத்தையுள்ளவரும், பெயர் கெட்டுப் போனவர்களுமான தோழன், தோழி ஆகியோருடன் சேர வேண்டாம். தீய நடத்தையுள்ளவர்கள் எனத் தெரிய வந்தால் விட்டு விலகுங்கள். அவர்கள் ஆபத்தானவர்கள்.

நண்பர்கள் எல்லாரையும் விலக்கிவிட்டு அவர்களுள் சிறப்பானவாகள் எனச் சிலருடன் மட்டும் எபபோதும் போய்க் கொண்டிராதீர்கள். எல்லாருடனும் இயல்பாகக் கலந்து பழகுங்கள். நகைச்சுவைப் பண்புள்ளவராக இருங்கள். அதுவே நனமையும் ஞானமும் இணைந்தது.

சொல்லாலோ, செயலாலோ எவருக்கும் தீங்கிழைக்கக் காரணமாக இராதீர்கள். முக்கியமாகச் சிறுவருக்குத் தீய மாதிரி காட்டாதீர்கள். மற்றவர்கள் உங்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவோ, விளையாட்டுப் பொருளாக நினைக்கவோ அனுமதியாதீர்கள்.

ஆராய்ந்து தேர்ந்தெடுக்காத எத்தகைய நட்பினுக்கும் ஆர்வமூட்டவோ, ஆதரவு காட்டி இடமளிக்கவோ செய்யாதீர்கள். உங்கள் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க மாட்டீர்கள் என்பதை வெளிப்படுத்துங்கள். நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருங்கள். சிலர் பணத்துக்காக உங்களுடன் பழகலாம்; வேறு சிலர் தவறான வழிக்கு உங்களை இட்டுச் செல்லலாம்.

தூயவராக இருங்கள், தீச்சொற்களைப் பேசாதீர்கள்; இரட்டை அர்த்தம் தொனிக்கும் சொற்களையோ, பாணியையோ பயன்படுத்தாதீர்கள். அசிங்கமாகப் பேசுவது, அறிவும் மனமும் அழுகிப் போயிருப்பதன் அடையாளம்.

பரிசுப் பொருள்களைப் பரிமாறிக் கொள்வதும், கடன் கொடுப்பதும் வாங்குவதும் அறவே விலக்க வேண்டியவை. உங்களையும் அறியாமல் அது வருத்தமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். ஏதேனும் நிகழ்ந்துவிட்டால் உடனடியாக உங்கள் பெற்றோரைக் கலந்தாலோசித்துத் தீர்வு காண முயலுங்கள்.

எவருக்காவது நீங்கள் உறுதி மொழி வழங்கினால், அதனை நிறைவேற்றுங்கள்; நம்பிக்கைக்கு உரியவராக நீங்கள் இருக்கவேண்டும். பிறரிடம் அவசரமான - முட்டாள்தனமான, போலி வாக்குறுதிகளை வழங்க வேண்டாம்.

பிறரிடமிருந்து கடன் பெற்ற பொருள்களையோ, நூல்களையோ குறித்த காலத்தில் நல்ல முறையில் திருப்பிக் கொடுங்கள். மற்றவர்கள் உங்களுக்குச் சலுகையோ சேவையோ செய்யும்பொழுது, நன்றி என்னும் சொல்லை உங்கள் உதடு உதிர்க்கத் தயாராக இருக்கட்டும். நன்றி கூறுவது ஒருவரது உயர்ந்த பண்பை வெளிப்படுத்தும்.

பிற மனிதருக்கு நன்றியுள்ளவராக இருங்கள். சின்னஞ் சிறு பயன்பெற்றாலும் பணி செய்தவரைப் பாராட்டுங்கள். கருணைப் பண்பும், தாராள உள்ளமும் உடையவர்களிடம் நன்றி பாராட்டுவதால் அவர்களது மனஉணர்வு மேலும் தூண்டப்பெற்று அவர்கள் தொடர்ந்து கனிவையும் தாராள மனத்தையும் காட்டும் செயல்களைச் செய்வர்.

உங்களிடம் ஒரு முக்கியமான பணிக்கான உதவி கோரும்பொழுது, உங்களால் நிறைவேற்ற இயலாமல் போகலாம். அப்பொது 'என் இயலாமைக்கு வருந்துகிறேன்; அருள் கூர்ந்து பொறுத்துக்கொள்ளுங்கள்' எனப்பண்புடன் பதில் சொல்லுங்கள்.

கூட்டமாகப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, பக்கத்தில் இருப்பவருடைய காதில் இரகசியமாகக் கிசு கிசுப்பதும், பிறருக்குத் தெரியா குழுவுக் குறி மொழியில் பேசுவதும் மோசமான நடத்தைகளாகும்.

ஒருவரது பேச்சு மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்துகிறது என்பதை நன்றாக அறிந்தும், அவ்வாறே பேசுவது வக்கிர மனத்தின் அடையாளமாகும்.

வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் நடந்து கொள்ளத் தயக்கம் தேவையில்லை. பிறர் உங்களைப் பற்றி விளையாட்டர்கப் பேசும் பொழுதும் நகைச்சுவையாகவே புரிந்துகொள்கிற மனப்பக்குவம் வேண்டும்.

மற்றவர்களுக்கு எப்போதும் தாராளமாக உதவி செய்யுங்கள்.

"உங்களிடையே உயர்ந்தோருமில்லை, தாழ்ந்தோரும் இல்லை. நீங்கள் அனைவரும் சகோதர சகோதரிகளே, அதனால் வளமையை அடைவதற்கு ஒருங்கிணைந்து பாடுபடுங்கள்."

\- ரிக்வேதம்

"அடுத்தவர் உங்களுக்கு எவ்வறைச் செய்யக்கூடாது என்று எதிர்பார்க்கிறீர்களோ, அவற்றையெல்லாம் மற்றவர்களுக்குச் செய்யாதீர்கள்."

\- மகாபாரதம்

# எதார்த்தம்

ஏரிக்கரை, கொக்கு ஒன்று நத்தைகளைத் தின்று வளமாய் வாழ்ந்து வந்தது.

ஓய்வு நேரங்களில், தேவலோகம் பற்றிப் பகல் கனவு கண்டது.

அப்போது அங்கு தேவலோகப் பறவை ஒன்று வந்திறங்கியது.

பார்க்க எழில் மிகு தோற்றத்தில் மின்னியது.

'ஆஹா...என்னே அழகு..! என்னே வனப்பு...!'

**அதிசயித்தது கொக்கு:**

'அழகிய பறவையே..! நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?'

**அறிமுகப்படுத்திக் கொண்டது அந்த மினு மினுப் பறவை:**

'என்னையா யார் என்று தெரியவில்லை...? நான் தான் அன்னப் பறவை. தேவலோகத்திலிருந்து வருகிறேன்.'

**ஆர்வமானது கொக்கு:**

'நீ தான் அன்னப் பறவையா? உன்னைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்.



உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும். தேவலோகம் எப்படி இருக்கும்?'

**வாய்ப்புக்காகக் காத்திருந்தது போல் விவரித்தது அன்னப்பறவை:**

'தேவலோகத்தை நீ பார்த்ததில்லையா? அங்கே தித்திப்பான நீர் இருக்கும். தெளிந்த தேக்கம் இருக்கும். எங்கணும் பொற்றாமரை பூக்கள் நிரம்பி இருக்கும். இரத்தினக் கற்களால் அமைக்கப்பட்ட கரைகள் காணப்படும்.'

**அடுக்கிக் கொண்டே போனது அன்னப் பறவை:**

'மொத்தத்தில் அது ஏரியல்ல; தடாகம்....தங்கத் தாடகம்.'

**நிறுத்தியது கொக்கு:**

'அதெல்லாம் சரி, அங்கே நத்தைகள், மீன்கள் உண்டா?'

என்னது? நத்தைகள்...மீன்களா...?

**சிரித்தது அன்னம்:**

'இது போன்ற நார நத்தைகளும் கவிச்சை மீன்களும் அங்கு இருக்காது.'

**அதிர்ச்சியானது கொக்கு:**

'நத்தைகள் இல்லாத தங்கத் தடாகமா? மீன்கள் இல்லாத தேவலோகமா? அதை நீயே வைத்துக் கொள்...!'

சோகத்துக்கு ஆகுமாய்யா உன் சொர்க்கத்துச் சுரைக்காய்..?

## யாழ் மறைமாவட்ட.... (1ம் பக்கத் தொடர்ச்சி)

மறைமாவட்ட புதிய செயற்குழு தெரிவு என்பன இடம் பெற்றன. பிற்பகலில் திருமறைக் கலாமன்ற உதவி இயக்குனர் திரு. யோண்சன் ராஜ்குமார் தலைமையில் "கலையரங்கு" இடம் பெற்றது. இதில் மறை மாவட்ட ரீதியாக போட்டிகளில் முதலிடம் பெற்ற "வில்லுப்பாட்டு" "விவாத அரங்கு" என்பன இடம் பெற் றன. இந்த இரு நிகழ்வுகளும் யாழ் சுண்டுக்குளிப் பங்கை சேர்ந்த குழுக்களினால் அரங்கேற்றப்பட்டன. மேலும் இந்த மாநாட்டில் பொதுநிலையினர் கழகத்திற்கான கொடி (Flag). ஒன்று வடிவமைக்கப்பட்டு ஏற்றப்பட்டதுடன் எழுச்சிக் கீதம் ஒன்றும் புதிதாக இயற்றப்பட்டு முதன் முதலாக இசைக்கப்பட்டது குறிப்பிடத் தக்க நிகழ்வுகளாக அமைந்தன.

இந்த வருடாந்த நிகழ்வை மறைமாவட்ட பொதுநிலையினர் இளையோர், அன்பிய ஆணைக் குழுவின் இயக்குனர் அருட்பணி. ம.வி.இ.இரவிச்சந்திரன் நெறிப்படுத்தலில் கழக செயற் குழு சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள்.

## வாய்ப்புக்களைப் பயன்படுத்துங்கள்

*வாழ்க்கை பல வாய்ப்புக்களை வழங்குகிறது*
*வாழ்க்கை பல மாற்று வழிகளைக் காட்டுகிறது*
*வாழ்க்கை தரும் வரங்களைப் பயன்படுத்தி*
*வளர்ச்சி பெறுவோம்.*

*வாய்ப்பும் வசதியும்*
*எப்பொழுதும் வராது*
*வருகின்ற போது*
*நழுவ விட்டுவிட்டவர்கள்*
*வருத்தப்படுகின்றார்கள்.*
*பயன்படுத்திக் கொண்டவர்கள்*
*முன்னேறிச் செல்கின்றார்கள்.*

*ஒரு வாய்ப்பு இழந்தாலும்*
*நம்பிக்கையோடு மறு வாய்ப்பை*
*உருவாக்கிக் கொள்ள வேண்டும்.*

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# புனித நாட்டிற்கான ஒரு புனித பயணம்

பிலோமினா சுவாம்பிள்ளை
(முதலாவது யாத்திரைக்குழு சார்பாக)

இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் கிட்லரின் ஆட்சியில் கொல்லப்பட்ட 60லட்சம் யூதர்களில் 15லட்சம் பேர் குழந்தைகள். இவர்களுக்கென ஒரு நினைவாலயம் ஜெருசலேமில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனையும் தரிசிக்கும் வாய்ப்பும் எமக்குக் கிட்டியது. இருண்ட மண்டபத்தில் மெழுகு வர்த்திகளின் ஒளி தாரகைகளைப் போல ஜொலித்தன. ஒவ்வொரு ஒளிக்கீற்றும் கொல்லப்பட்ட ஒவ்வொரு குழந்தையையும் பிரதிநிதித்துவப்படுத்தியது. கொல்லப்பட்ட ஒவ்வொரு குழந்தையினதும் பெயர், வயது, பிறப்பிடம் ஆகியவை தொடர்ந்து ஒலி பரப்பப்பட்டுக் கொண்டிருந்தன. கொல்லப்பட்ட குழந்தைகளின் விபரங்கள் ஒருமுறை ஒலி பரப்பப்பட ஐந்துவருட இடைவெளி தேவை என்ற செய்தி எமக்கு அதிர்ச்சியூட்டுவதாய் இருந்தது.

மரியன்னை துயில் கொள்ளும் இடத்தையும் தரிசித்தோம். மரியா உயிரோடும் உடலோடும் விண்ணகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பது தான் எமது விசுவாசம். உயிருடன் துயிலும் பாவனையாக அமைக்கப்பட்டிருந்த அவரின் திரு உருவம் பார்ப்பதற்குப் பரவசம் ஊட்டுவதாய் இருந்தது.

இயேசுவின் கல்வாரிப் பாதையில் பயணிக்கத் தயாரானோம். இயேசு ஜெருசலேம் நகர்வழியாகச் சிலுவையைச் சுமந்து சென்றது போல எமக்கும் தெருக்கள், கடைகள், அங்காடிகளை ஊடறுத்து சிலுவையுடன் செல்லும் பாக்கியம் கிடைத்தது. சிலுவையைச் சுமக்கப் பெண்களும் அனுமதிக்கப்பட்டார்கள். முதல் 10 நிலைகளை வீதிகளில் தியானித்த நாம் 11, 12, 13, 14ம் நிலைகளை இவைகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள பேராலயத்திற்குள் நின்று மௌனமாகத் தியானித்தோம். இயேசுவின் திரு உடலைப்பரிமள தைலத்தால் பூசிய இடத்தில் இன்றும் நறுமணம் வீசிக்கொண்டேயிருக்கிறது. வெரோணிக்கா இயேசுவின் திருமுகத்தை வெண் துகிலால் துடைத்து போல நாமும் அந்த இடத்தை வெள்ளைத் துணிகளால் ஒற்றிக் கொண்டோம். இது பரிசுத்தமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய தொன்று என்று நம்புகிறோம். இயேசுவின் திரு உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறை பாதாளக் குகையாக அமைந்திருந்தது. கால்கள் கடுக்க மணிக்கணக்கில் காத்திருந்துதான் இதனைத் தரிசிக்க முடிந்தது. அங்கே இயேசுவின் உயிர்ப்பு விழாத் திருப்பலியில் பங்குபற்றினோம்.

"நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்" *(யோவா 16:16-17)* என்று எம்மை அழைத்த இறைவன் புனிதப்பயண நாட்களில் எந்த வித இடையூறுமின்றி வழிநடத்தினார். மலைச்சிகரங்களை அடையப்படிகளைத் தாண்டினோம். குனிந்து தவழ்ந்து குகைகளுக்குள் நுழைந்தோம். இவற்றிற்கெல்லாம் வலிமையைத் தந்தார். களைப்புக்குப் பதில் களிப்பைத் தந்தார். ஒவ்வொரு அசைவிலும நாம் இயேசுவுடன் நடப்பதாக, சிலுவை சுமப்பதாக, உருமாற்றம் அடைவதாக உணர்ந்தோம். ஒவ்வொருவரும் இயேசுவின் உடன் பங்காளிகள் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல இது எமக்கு ஒரு மறக்க முடியாத அனுபவம் என்பதை எவருமே மறுக்க முடியாது.

எங்கள் குழுவில் நான்கு அருட்பணியாளர்களும் இணைந்து கொண்டனர். ஒருங்கிணைப்பாளராக அருட்பணியாளன் போல் றொகான் செயற்பட்டார். இவருடன் அருட்பணியாளர்கள் நேசநாயகம், டொன் பொஸ்கோ (செ.தா), லியோனிஸ் (செ.தா) ஆகியோரும் இணைந்து கொண்டனர். இவர்கள் அருட்பணியாளராக மட்டுமல்ல, வழிகாட்டிகளாக, நல்ல நண்பர்களாக, உற்ற சகோதரர்களாக நடந்து கொண்டனர். ஒவ்வொருவரும் எங்களுக்குள் ஒருவராகவும் எல்லாருக்கும் எல்லாமாகவும் செயற்பட்டார்கள். யாத்திரிகள் ஒவ்வொருவரிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தி நலம் விசாரித்துத் தேவைகளைப் பூர்த்தி செய்து யாத்திரை முடியும் வரை விழிப்புடன் செயற்பட்டார்கள்.

எமக்கு இப்படி ஒரு யாத்திரைக்கான பாக்கியத்தை அருளச் சித்தம் கொண்ட இறைவனுக்கு முதலில் நன்றி கூறுகிறோம். அடுத்து அன்பும், பண்பும் பரிவும் கொண்ட அருட்பணியாளர்களுக்கும் எம் ஒவ்வொரு வரினதும் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவர்களின் பணி சிறக்கவும் இன்னும் பல குழுக்களை இறைவன் இந்தப் புனித யாத்திரையில் இணைக்கவும் வேண்டி நிற்கிறோம்.

வேதாகமத்தை நுணுக்மாக வாசிக்க வேண்டும். பெற்றுக் கொண்ட அனுபவங்களை இன்னும் ஆழப்படுத்திக் கொள்ள வேண்டும். அயலவருடன் பகிர்வதன் மூலம் வாய்ப்புக் கிடைக்காதவர்களுக்கு ஒரு தூண்டுதலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வமே இந்த யாத்திரைக்கான மகுடம் என்று நம்புகிறோம்.

(முற்றுப் பெற்றது)


"திறமையோடுகூடப் பொறுமையும் கலந்தால் இளைய தலைமுறைக்கு வெற்றி நிச்சயம்."

# இளைஞர்களிடம் இல்லாத 'மை'

இன்றைய இளைய தலைமுறையிடம் இருக்கிற உன்னதமான 'மை' திறமை. இல்லாத 'மை' பொறுமை. காத்திருப்பது என்பதும் ஒரு கலைதான். நம்முடைய முறை (Turn) வரும் வரை பொறுமையாக இருப்பது என்பது அவசியம். அதற்கு நம் மீது நமக்கு ஆளுமை வேண்டும்.

ஆறு மாதம் விளையும் அரிசியை மூன்று மாதத்தில் விளைய வைத்தது விஞ்ஞானம், ஆறு வருஷத்தில் காய்க்கும் தென்னையை மூன்று வருஷத்தில் காய்க்க வைத்தது விஞ்ஞான விவசாயம். விளைவு...! இந்தக் குறுவைப் பயிர்களையும் அவசர கால விவசாய விளைவுகளையும் உண்ணும் இளைய தலைமுறை அலாதியான அவசரத்தில் இருக்கிறது. படபடப்பு...! பரபரப்பு...! பதற்றம்...! அவசரம்...! ஆத்திரம்...! இவை எதையுமே சாதிக்கப் போவதில்லை. கொழுத்த மீன் வரும் வரை காத்திருக்கும் 'கொக்கொக்க' என்ற திருக்குறள் இளைய தலைமுறைக்கு அவசியம் புரிய வேண்டும்.

பஸ்ஸுக்கோ, ரயிலுக்கோ, சாபபிடவோ, திருமணத்திற்கோ எதற்குமே காத்திருக்க இவர்கள் தயாராக இல்லை. எல்லாவற்றிற்கும் அவசரப்பட்டால் முதுமையும் முந்தி வரும், மரணமும் விரைவில் வரும். அவசரப்படாத நிதானம் பல ஆபத்துகளில் இருந்து உங்களைப் பாதுகாக்கும். படபடக்காமல் பிரச்சினைகளைக் கையாண்டால் பல புதிய




புதிய தலைமுறை படிக்க வேண்டிய கட்டாயப் பாடம்.

அளவுக்கு மீறிய பொறுமையை நான் வற்புறுத்தவில்லை. பத்து வயதிலேயே நாற்பது வயதுக்குரிய நாற்காலிகளை அடைய நினைப்பதும், பதினைந்து வயதிலேயே இருபத்தைந்து வயதுக்குரிய கட்டில்களைப் பகிர்ந்துகொள்வதும், முப்பது வயதிலேயே அறுபது வயதுக்குரிய முதுமையில் தளர்வதும் சகிக்கும் படியாகவா இருக்கின்றன? இந்த அவசரம் இளமைக்கு அவசியமா?

பஞ்ச தந்திரக் கதைகளிலே அருமையான கதை ஒன்று உண்டு. ஒரு குட்டிக் குரங்கு படாத பாடுபட்டு ஒரு தோட்டம் போட்டது. செடிகள் வளர்ந்து மரமாகிப் பூத்துக் குலுங்கிக் காய்கனிகள் கொட்டும், ஆசை ஆசையாய் அள்ளித் தின்னலாம் என்று கணக்குப் போட்டது. என்ன கொடுமை! எதுவுமே முளைக்கவில்லை. ஆசை நிராசையானது.

அது ஒரு நாள் சீனியர் குரங்கிடம் போய் ஆலோசனை கேட்டது. எதுவுமே முளைக்கவில்லை என்று ஒப்பாரி வைத்தது. சமாதானப்படுத்திய சீனியர் குரங்கு, 'விதை போடா தண்ணி ஊத்தணும். நீ தண்ணி ஊத்தியிருக்கமாட்டே' என்றது.


'ஆங்.. ஒரு விதைக்கு எட்டு பக்கெட் தண்ணி தினம் தினம் காலையும் மாலையும் ஊற்றுவேன் என்று குட்டிக் குரங்கு குற்றச்சாட்டை மறுத்தது.

'அடடா...எட்டு பக்கெட் தண்ணி விட்டா விதை என்னாகும்...அழுகிப் போயிருக்கும்..அதான் முளைக்கல' என்று தீர்ப்பு வழங்கியது சீனியர்.

குட்டிக் குரங்கோ...'ஒரு விதை கூட அழுகல' என்று உறுதியாக உறுமியது. 'அதெப்படி உனக்கு தெரியும்?' என்றது சீனியர். 'நான்தான் விதை முளைச்சிருச்சான்று தினம் எடுத்து எடுத்துப் பாக்கறேனே' என்றது குட்டிக் குரங்கு.

எப்படி இருக்கிறது கதை? தினம் தினம் விதையை எடுத்து எடுத்துப் பார்த்தால் விதை எப்படி முளைக்கும்? அது அதற்கு என்று ஒரு காலம் இருக்கிறது. அந்தக் காலம் வரை காத்திருக்க வேண்டியது அவர் அவர் கடமை. அதற்குத் தேவை பொறுமை. 'பொறுத்தது போதும், பொங்கி எழு' என்கிற குட்டித் தலைவர்கள் வெட்டிப் பேச்சை நம்பி, பொங்கிக் கொண்டே இருந்தால் வளர முடியுமா? திறமையோடுகூடப் பொறுமையும் கலந்தால் இளைய தலைமுறைக்கு வெற்றி நிச்சயம்.

## சிந்திக்க ஓர் சித்திரம்




ச. சுலோச்சனா

# இறை இரக்கத் திருவிழா

15-04-2012ல் புனித அன்னாள் ஆலயம், பாண்டியந்தாழ்வுப் பங்கில் இறை இரக்கத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. புனித அன்னாள் பங்கு இறை இரக்கக் குழுவும் துணைப் பங்கான அரியாலை புனித யூதா ஆலய இறை இரக்கக் குழுவின ரும் இணைந்து இத்திருவிழா வைக் கொண்டாடினர். பங்குத் தந்தை அருட்பணி. நீக்கிலஸ் அடிகளார் திருவிழாத் திருப் பலியை நிறைவேற்றினார். ஒளி ரும் திரிகளை ஏந்தியவராய் இறை இரக்க குழுவினர் அருட் தந்தையை பவனியாக திருப் பீடத்திற்கு அழைத்து வந்ததோடு திருப்பலி ஆரம்பித்து திருவசா கங்களும், பாடல் குழுவினரின் பாடல்களும் பக்தியை ஊட்டின. அருட்தந்தையின் மறையுரை அனைத்திற்கும் சிகரம் வைத் தால் போல மக்களை ஆழ்ந்த சிந்தனைக்கு அழைத்துச் சென் றது. அளவிடற்கரிய அன்பும் இரக்கமும் பரிவும் கொண்ட இறைவன் தம்மை முழுமை யாக மன்னித்து நமக்கு தமது இரக்கத்தைப் பொழிந்து எங் களை அன்பு செய்வது போல நாங்களும் அடுத்திருப்பவரை மன்னித்து அன்பு செய்து இரக்கம் காட்டவேண்டும். அதுவே இத்திருவிழாவை நாம் கொண்டாடுவதன் நோக்கமாக இருக்க வேண்டும் என்றார். இறை இரக்கக் குழுவினரின் அர்த்தமுள்ள காணிக்கைப் பவனியும் இடம் பெற்றது. திரு விருந்தின் பின் இறை இரக் கத்திற்கு அனைவரும் அர்ப் பணம் செய்யப்பட்டு அருட் தந்தை இறை இரக்க ஆசியு டன் திருவிழாத் திருப்பலி

திருமதி. சேவியர் ஜெயராணி



இனிதே நிறைவுற்றது. இத்திரு விழாவைச் சிறப்புற வைத்து இறைவனுக்கு முதல் நன்றி கூறுவதோடு எங்கள் பங்குத் தந்தைக்கும் இறை இரக்கக் குழுவினர்க்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்தனர்.

இரு இறை இரக்கக் குழுவினர்களும் தேநீர் விருந் துபசாரத்துடனான ஒன்று கூட லுடன் நிறைவு பெற்றது.

## "நீதியிலும் அமைதியிலும் வளர இளையோருக்குத் கற்றுத்தர வேண்டும்"

- வத்திக்கான் -

இக்கால மற்றும் வருங் காலத் தலைமுறைகள், அமை தியில் வாழவும், அமைதியை ஏற்படுத்துகின்றவர்களாகச் செயல் படவும் ஒன்றிணைந்து உழைக்கு மாறு கிறிஸ்தவர்களாகச் செயல் படவும் ஒன்றிணைந்து உழைக்கு மாறு கிறிஸ்தவர்களுக்கும் புத்த மதத்தினருக்கும் அழைப்பு விடுத்துள்ளது வத்திக்கான் பல்சமய உரையாடல் அவை.

வெசாக் என்ற புத்தமதத் தினின் முக்கிய விழாவையொட்டி உலகெங்கும் வாழும் புத்தமதத் தினருக்கு செய்தி வெளியிட்ட வத்திக்கான் பல்சமய உரை யாடல் அவை, நீதி மற்றும் அமைதியின் கருவிகளாக இளை யோர் மாறுவதற்கு இவ்விரு மதத்தினரும் தங்களின் எடுத்துக் காட்டான வாழ்வு மற்றும் போத னைகள் மூலம் வழிகாட்டிகளாக அமையுமாறு வேண்டுகோ ாள் விடுத்துள்ளது.

இன்று உலகெங்கும் பல்வேறு மதங்களைச் சார்ந்த வர்கள் அருகருகே அமர்ந்து கல்வி கற்கும் நிலை ஏற்பட்டுள் ளது என்பதால், இளையோர் மற்ற மதத்தினரைப் புரிந்து மதித்து நடப்பதற்கு அவர் களுக்குக் கல்வி வழங்கப்பட வேண்டிய தேவை குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்றும் அச்செய்தி கூறுகிறது.

## விமர்சனங்களுக்கு விடை

புகழ்ச்சிகளைக் கண்டு
புல்லரித்துப் போகாதீர்கள்
இகழ்ச்சியைக் கண்டு
செல்லரித்துப் போகாதீர்கள்

விமர்சனங்கள் வீதியில் தெரியும்
விளம்பரங்கள்.....!
தேவைப்பட்டால் எடுப்போம்
இல்லையென்றால் விடுவோம்

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 - 05 - 1968 | 18 - 05 - 2009 |



குருத்துவம்: 14-05-2003

### அருட்தந்தை ம. சரஜீவராஜ்

"நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள், நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்... மிகச்சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25: 35, 40)

இவரின் ஆன்மசாந்திக்கா 18-05-2012 அன்று காலை 6.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்திலும், 18-05-2012 அன்று காலை 10.30 மணிக்கு புனித பற்றிமா அன்னை ஆலயம், உருத்திரபுரத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இல. 5 பற்றிக்ஸ் வீதி
யாழ்ப்பாணம்

Add: 46/12

தகவல்:
குடும்பத்தினர்

## 21ம் ஆண்டு நிறைவு

தோற்றம்
02-07-1929

மறைவு
06-05-1991

அன்பிற்கு இலக்கணமாகி
ஆண்டவன் இயேசுவை
அகிலத்தில் வாழ்த்தி!!
இகமதில் இயேசுவை
இனிதாக வாழ்ந்து காட்டினீர்கள்!
இளைப்பாறுங்கள் இறைவன் இல்லத்தில்
எமக்காகவும் இறைவனிடம் மன்றாடுங்கள்!!



அருட்திரு லோ. வ. இராயப்பு
அ. ம. தி

Add: 45/12

பாலதாஸ் குடும்பத்தினர்

## உலக இளையோர் தினம் கிறிஸ்துவின் திறந்த கரங்களின் அனுபவத்தைப் பெறுவதாக இருக்கும்

2013ம் ஆண்டில் பிரேசிலின் ரியோ டி ஜெனீரோவில் நடைபெறவிருக்கும் உலக இளையோர் தினம், கிறிஸ்துவின் திறந்த கரங்களின் அனுபவத்தைப் பெறுவதாக இருக்கும் என்று கர்தினால் ஸ்தனிஸ்லா ரில்கோ கூறினார். ரியோ டி ஜெனீரோவின் புறநகர்ப் பகுதியிலுள்ள கோர்கோவோடோ மீட்பராம் கிறிஸ்துவின் திருவுருவத்தை வைத்தே இந்த உலக இளையோர் தின அனுபவத்தைச் சொல்ல முடியும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் கருக்கலைப்பு அதிகரித்து வருகிறது என்றும், குழந்தைகளுக்கு இவ்வுலகில் உரிய இடத்தையும் மதிப்பையும் வழங்கு வதற்கு அன்னையருக்கு அனைத்து வகையிலும் வழிகாட்ட வேண்டும் என்றும் இலங்கை கர்தினால் மால்கம் இரஞ்சித் கூறினார். கருவில் உருவானது முதல் அனைத்து உயிர்களும் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறிய கர்தினால் இரஞ்சித், தவக்காலத்தில் திரட்டப்படும் காணிக்கைகள் பிறக்காத குழந்தைகளுக்கான நிதி என்ற பெயரில் ஒதுக்கப்படும் என அறிவித்தார்.

## நீங்காத நினைவில் ஆறு மாத நினைவலைகள்

### 28-05-2012 திங்கள்

"நீங்கள் கிறிஸ்துவோடு இறந்து விட்டீர்கள் உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்து தோன்றும் பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள்" (கொலோசையர் 3:3-4)

"ஆண்டவனில் உங்கள் ஆன்மா அமைதி பெற அனுதின மும் பிரார்த்திக்கின்றோம்" யாழ். கொழும்புத்துறை நிஜசீமாதா, அருள்ஆச்சிர மம், கிறிஸ்து அரசர் ஆலயங்களில் இவரின் ஆன்ம சாந்தி வேண்டி 28ம் திகதி (28-05-2012) திங்கள் காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மண்ணில்
24-08-1928

விண்ணில்
28-11-2011



அமரர். திருமதி சிசிலியா மெற்றலின் கிறிஸ்தோப்பர்

பிரிவால் துயருறும்
மகன்மார்கள் (கிறிஸ்தோப்பர், சேவியர், லோறன்ஸ், சூரியகுமார்) மருமகள்மார்கள் (யோகரானி, றாஜி, சசி) பேரப்பிள்ளைகள் (கார்த்திக், மேர்சி, கிறேசி, ஜோன் கிறிஸ்தோப்பர்)

30 பழைய பூங்காவீதி
முதலாம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

Add: 34/12

## நன்றிச் செபம்

அன்பான தேவனே! வணக்கத்திற்குரிய தோமஸ் அழகளாரின் மூலம் நான் கேட்ட மன்றாட்டைத் தந்து நோய் குணமடைய வைத்த உம் தயவிற்கு கோடி நன்றிகள். இதன் மூலம் அவரை மாட்சிமைப்படுத்தியமைக்கு உமக்கு நன்றிகள். தோமஸ் அழகளாரைப் புனிதர் நிலைக்கு உயர்த்த நீர் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

நன்றி : அடியாள்

Add: 48/12

## சவரிமுத்து திரேசா அன்னமேரி

### விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு



பிறப்பு
19-07-1947

இறப்பு
06-04-2012

அன்றும் இன்றும் என்றும் எங்கும் எப்போதும் உம்மை இடைவிடாது நினைவு கூர்ந்து துயருறும் உமக்கு அன்பையும் பாசத்தையும் வணக்கத்தையும் கூறி நிற்கும் குடும்பத்தினர்.

தாய்வீடு
4ம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

Add: 47/12

# திருப்பலிக் கட்டணம் (பூசைப் பணம்)?

**தமிழில் கஸ்பார் ஜெயரட்ணராஜா**

**ஆங்கிலத்தில் அருட்பணி. ஜேம்ஸ் ஹெகல்**
**புனித அந்தோனியார் பங்கு கல்கரி, அல்பேட்டா - கனடா**



இறைமக்களால் இறைபணியாளர்களிடம் கொண்டுவரப்படும் மன்றாட்டுகளுக்காக ஜெபிப்பது திருச்சபை நீண்டகால பாரம்பரியமாக கருதப்படுகிறது. இதைப் பற்றிய படிப்பினைகள் திருத்தந்தை ஆறாம் சின்னப்பரால் 1974ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இதற்கான ஆரம்பகால காரணங்களை நினைவுபடுத்திக் கொள்வது அவசியமாகவுள்ளது.

திருப்பலியிலே முழுமையாகப் பங்கெடுப்பது என்ற கருத்து 2ம் வத்திக்கான் சங்கத்தால் புதியது அல்ல. திருப்பலிக்கு காணிக்கை செலுத்துவது 2ம் வத்திக்கான் சங்கத்தால் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்படும் ஒரு பாரம்பரியமாகும். இதைப்பற்றி ஆறாம் சின்னப்பர் பின்வருமாறு கூறுகிறார். "இறைமக்கள் திருப்பலியின் போது திருச்சபையோடு சேர்ந்து தம்மைப் பலியாக ஒபபுக் கொடுக்கும் போது முழுமையாக" அப்பலியிலே பங்கு பெற்றுக் கொள்கிறார்கள் (13ந் திகதி ஆனி 1974).

உலகத்திற்கு வாழ்வு கொடுக்கும் திருப்பலியின் போது நாம் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்தெழுதலில் பங்கு பெறுவதோடு அந்த உன்னத ஜெபத்திலே பங்குகாரர்களாக உரிமை பெற்றுக்கொள்கிறோம். *(கொலோ 1:24).*

திருத்தந்தை ஆறாம் சின்னப்பரின் காணிக்கை என்ற பதம் பல வடிவங்களில் ஆனாலும் அதன் உள்ளார்ந்த அர்த்தம் மாறாது உள்ளது. ஒருவர் தன்னிடம் உள்ள ஒன்றை காணிக்கையாக்கி திருச்சபைக்கு வழங்குகையில் கிறிஸ்துவின் பாடுகளில் ஒன்றிணைகிறார்.

பணப்புழக்கம் வருமுன்பு ஒருவர் தனது நேரத்தையும் வேலையையும் திருச்சபையின் பராமரிப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும் ஒப்புக் கொடுத்தார்கள். குருவானவரின் பராமரிப்புக்காக தானியங்களைக் கொடுத்தார்கள். அந்நேரத்தில் ஏழைகளுக்கு கொடுப்பதற்காக உணவை வழங்கி வந்தார்கள். மற்றவர்கள் திருச்சபைக்கு என்ன தேவை என்ற அடிப்படையில் அத்தேவைகளை பூர்த்தி செய்தார்கள். தற்காலத்திலே எம்மிடமுள்ள பணத்தை செலுத்துவதன் மூலம் இவ்வாறான தேவைகளை நிறைவேற்றுகிறோம் திருப்பலிக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் முக்கியமான ஆன்மீகச் செயலொன்றைச் செய்கின்றோம். திருபபலிக் கட்டணத்தை செலுத்தும்போது பல்வேறு காரணங்களையும் முன்வைக்கிறோம். அதிகமானோர் கார்த்திகை மாதத்திலே இறந்த தமது அன்புக்குரியவர்களின் ஆன்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கிறார்கள். பலர் தமது பிறந்த நாளிலும் திருமண நாளிலும் செபம் வேண்டி திருப்பலி செலுத்துவார்கள்.

இறைமக்களின் செப வேண்டுதல்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் திருச்சபை ஒரு முக்கியமான கடமைப்பாட்டை எடுத்துக் கொள்கிறது. எவ்வாறு ஜெப வேண்டுதலை நிறைவேற்ற வேண்டுமென்று குருமார்களுக்கு சில விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காக ஒப்புக்கொடுக்கப்படும் கட்டணங்களுக்கு பதிவுகள் வைக்கப்பட்டுள்ளன. ஒரு குருவானவர் இறக்கும் பொழுது அவர் திருப்பலி செலுத்துவதாக உறுதிசெய்து பெற்று கொண்ட கட்டளைகளுக்காக அவரது இடத்தை எடுக்கும் குருவானவர் அத்திருப்பலிகளை ஒப்புக் கொடுப்பது கடமையாக உள்ளது. இதன் மூலம் திருச்சபையின் கடமைப்பாடு தொடர்ச்சியாக கடைப்பிடிக்கப்படுவது ஒவ்வொரு மறைமாவட்டங்களிலும் திருப்பலிக்கான கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதற்கான காரணம் திருப்பலிக்கான கட்டணங்களை கட்டுப்பாடற்ற வகையில் வேறுபடக்கூடாது என்பதற்காகவே ஆயர்கள், பொதுமக்கள் செலுத்தக் கூடிய பணத்தையே நிர்ணயித்துள்ளன.

இத்தொகையை செலுத்த முடியாதவர்கள் குருவானவர்களிடம் தமது இயலாமையை எடுத்துக் கூறும்போது வேறு ஏற்பாடுகளை குருவானவர் செய்வார். அது ஜெபமாகவோ உபவாசமாகவோ இருக்கலாம்.

திருபபலியில் முழுமையாக பங்கு பெற்றுவதால் இறைமக்கள் பெறக்கூடிய நன்மைகள் பின்வருமாறு.

1. கிறிஸ்துவோடு மிகவும் நெருக்கமாக உறவாடுதல்.
2. திருப்பலியின் பலாபலன்களை முழுமையாக பெற்றுக் கொள்ளுதல்.
3. கிறிஸ்துவோடு ஆழமாக உறவு கொள்ளுதல்.
4. குருவானவரோடு ஆழமான உறவை ஏறபடுத்திக் கொள்ளல்.
5. குருவானவார் இறைமக்களின் தேவைகளை அறிந்து கொள்ள ஏதுவாக உள்ளது.

# "செவாலியர் அமுது" ஒரு தமிழ் எழுத்து

**"அறிஞர் அமுது ஒரு தமிழ் எழுத்து" என்றும், "புலவர் அமுதுக்கும் தமிழ் என்று பேர்" என்றும் கூறுகிறார்.**

***கவிப்பேரரசு வைரமுத்து***

அன்று சனிக்கிழமை எனக்கு ஓய்வு நாள் 'அக்கா நீங்கள் கூட்டத்திற்கு வரவில்லையா? என்றபடி வந்தாள் அருளினி 'என்ன கூட்டம் என்றேன். என்னக்கா 'இது தெரியாதா, இன்று புலவர் அமுதல்லவா பேசுகிறார் அவர் பேச்சென்றாலே ஒரு தனி இன்பம் பிறக்கும். நகைச் சுவை மன்னன் சொல்லின் செல்வன் அறிவுக்கடல் கேட்டால் அவர் பேச்சை ஏதோ புது அறிவுடன் புத்துயிர் பெற்றாற்போலிருக்கும்" நான் கேட்டதில்லை சரி நானும் வருகிறேன் என்று அவளுடன் போனேன். சபையோரின் குதுகலமான சிரிப்பொலி ஆரவாரம் எல்லாம் ஏன் என்று புரிந்தது. மிக ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு காலமும் தமிழில் உயிரை வைத்திருந்த எனக்கு எப்படி இவர் பற்றி அறிய முடியவில்லை? என அங்கலாய்த்தேன்.

அவர் லண்டன் பிரஜை, அக்கா அங்கிருந்தே தமிழுக்கு தன் உயிரை தாரை வார்த்துக் கொடுத்துள்ளார். அஞ்சா நெஞ்சும் உயிர் ஞானச் செருக்கும் கொண்ட தமிழன். பெரும்பாலும் இவரது பேச்செல்லாம் பல அந்நிய நாடுகளின் மேடையில் தான். இவரது எழுத்தாக்கம் கூட அவ்வளவாக இங்கு வருவதில்லை நான் சில நூல்கள் சேர்த்துவைத்திருக்கிறேன் என்று கூறி "அன்பின் கங்கை அன்னை திரேசா" என்ற நூலைத் தந்தாள் அருளினி. படித்தேன் என்ன அற்புதமான படைப்பு! லண்டனில் வாழ்ந்து கொண்டும் இவ்வளவு அற்புதமாக இலக்கியம் படைக்கிறாரே இவரின் வெளியீடுகளைப் படிக்க வேண்டுமென்ற அவா எழவே இவரது ஆக்கங்களை நூல்நிலையத்திலிருந்து பெற்றேன் "அமுதுவின் கவிதைகள்" என்ற தொகுப்பை படித்தேன் என்ன ஒரு ஒப்பற்ற கவிஞர்! அவரது கற்பனை வளம், புதிய விதமான சிந்தனைச் செறிவு, அறிவின் விரிவு, யாவற்றையும் வியந்தேன்

**"துஞ்சாது சுதந்திரத்தின் தென்றல்தவழ் நாட்டில் தூய்மையோடு வாய்மை நெறி சுற்றி வரும் நாட்டில் நெஞ்சார நீதிநெறி தவறாத நாட்டில் நீ என்னை அழைத்துச் செல் நான் அங்கு வருவேன்"** என்று பாடுகிறார். ஏன் நாடு கடந்தார் என்று இப்போது புரிந்தது. ஈழக்கொடுரங்களைக் கண்டு நாட்டைத் துறந்தே போய்விட்ட ஒருவர் தன் நாட்டில் கொண்ட தீராத காதலை அதைத் துறந்த ஆறாத துயரை வெளிப்படுத்தும் கவிதைகளே அதிகமாய் அந்நூலில் காணப்பட்டது. தமிழனின் செழிப்பான வன்னி, வரட்சியாய்ப் போனதை எண்ணி "முன்னர் அந்த ஆங்கிலேயர் மூக்கறுத்த பொன்நாடு என்று பொருமுகிறார். தான் பிறந்த நாடாகிய நெடுந்தீவும் ஆங்கிலேயரால் மூக்கறுக்கப்பட்டதும், அவர் நெஞ்சை வருடிய வரலாறு. இலங்கைத் தமிழனின் துன்பத்தைக் கருதி அக்காலத்தை "வெள்ளைச் சுருட்டுக்களால் மேனி எங்கும் பொக்குளிப்பான் துள்ளித் துடித்தலரச் சுட்டெரித்த காலம்" என வர்ணிக்கிறார். அவரின் மடுமாதா காவியம் கவிப்பேரரசர் வைரமுத்தை வியக்கவைத்த காவியம் கவிதைகளைப் பொறுத்த மட்டில் "கவித்தாமரை பூத்த செந் தமிழ்த் தடாகம்", மரபுக்கவிதைகளின் உற்பத்தி மாலை" என்றெல்லாம் கவி மாமணி க.த. ஞானப்பிரகாசத்தால் பாராட்டுப் பெற்றவர். இயேசு பிரான் மாட்டுக்கொட்டிலில் பிறந்ததை நோக்கி "ஊரார் பழியாரோ உலகோர் நகையாரே சீரார்த்த சீமானே சிறுகுடிலை ஏன் தெரிந்தாய்?" என்ற அவர் கேள்வி வசிப்பிடம் வாழ்க்கை வசதிக்காக மட்டுமல்ல அதை விட முக்கியமாக சமூக கணிப்பீடாகவும் அறிவற்ற சமூகத்தின் அர்த்தமற்ற விமர்சனங்களுக்காகவும்தான் என்ற கருத்தை நகைச்சுவையாக புலப்படுத்துகிறார். இவரது காவியங்கள் எத்தனையோ பட்டங்களை அள்ளிக் கொடுத்ததுடன் பாப்பரசரின் "பாவேந்தர்" என்ற பட்டமும் கிடைத்தது. பின்னர் இவரது மத, மனித நேயப் பணிகளால் பாப்பரசரது கிடைத்தற்கரிய "செவாலியர்" பட்டமும் கிடைத்தது. அமுது ஐயா 22வது வயதில் "மாதா அஞ்சலி" என்ற நூலை இயற்றினார். மடுமாதாவிடம் ஒரு குருடன், செவிடன், ஊமையும், முடவனும் போய் சேர்கின்றார்கள். அங்குபோனதும்

**"கண்ணொளி தெரியான் அங்கே கடவுளின் தாயார் என்றான் பண்ணொளி கேட்கிறதென்று பக்கத்தே செவிடன் சென்றான் நண்ணினான் முடவன் துள்ளி நடந்தனன் படிகள் மீது என்னருள் தாயே என்றான் இருகைகள் கூப்பி ஊமை"**

அற்புதங்களை என்ன அழகாக விமர்சிக்கின்றார்! தன் நேரத்தை கட்டுரை, கவிதை, கற்பனை மூலம் உலகைத் தட்டியெழுப்பப் பாடுபட்டாலும் தன் தந்தை என்ற கடமையில் சிறிதும் வழுவாது தன் பத்துப் பிள்ளைகளையும் லண்டன்மாநகரிலும், அமெரிக்காவிலும், சீரோடும் சிறப்போடும் வாழ வைத்துள்ளார். பிள்ளைகள் மருமக்கள் யாவரும் உயர் பணிகளில் உத்தமராய்ப் பிரகாசிப்பினும் தன் பிரிய மகனாரை கடவுளுக்கே எனக் கொடுத்துள்ளார். வீர உதிரம் கொண்ட தியாகத் தமிழ் அறிஞர்களாகிய தனிநாயகம் அடிகள், புலவர் ஞானப்பிரகாசம் அடங்கலாக பல அறிஞர்களையும், சமுதாய சிற்பிகளையும் பசுந்தீவு எனப்பட்ட நெடுந்தீவின் தவப்புதல்வராகிய அமுது ஐயாவையும் இழந்து விட்டது. எத்தகைய இழப்பு என்பது அவர் நூல்களை படிப்போர் உணர்வர்.

இலக்கியத்தாகம் கொண்ட ஒருவரின் மகனாகவும், இலங்கை வரலாற்றில் தம் அடிச்சுவடுகளை அழியாது பதித்துச் சென்ற மூவரின் சகோதரரராகவும், இளவாலையில் படிப்பறிவு சூழ்ந்த பரம்பரையில் வந்த பெண் திரேசாவை மனைவியாகவும் கொண்டு பார்போற்ற வாழ்ந்த இந்த அறிஞரின் வாழ்க்கை வரலாறு ஒரு தங்கச் சுரங்கம் என்பதை அவர் வரலாறு உணர்த்தும்.

நன்றி
T. கியூறி நெடுந்தீவு

## சிரிப்பும் இனிப்பும்!

இனிப்பு, சர்க்கரை என்ற வார்த்தைகளை நினைத்தவுடன் மனதுக்குள் ஒரு மகிழ்ச்சியும் கிளுகிளுப்பும் உருவாக வேண்டும்! ஆனால் இன்று அப்படி ஒரு மகிழ்ச்சி இருக்கிறதா?

சர்க்கரை என்ற வார்த்தையைக் கேட்டவுடன் நமக்குச் சர்க்கரை நோய் தான் நினைவுக்கு வருகிறது! ஒரு பயம் நெஞ்சைக் கவ்வுகிறது!

நம்நாடு இன்று சர்க்கரைக்கு (அதாவது சர்க்கரை நோய்க்குப்) பெயர் போனதாக மாறிவருகிறது. நாட்டில் ஆறில் ஒருவருக்கு சர்க்கரை நோய் அறிகுறி இருக்கிறது. பல குடும்பங்களில் இது பரம்பரைச் சொத்தாக மாறிவருகிறது!

இப்போது சிரிப்பு இனிப்பைக் கட்டுப்படுத்த உதவுகிறது என்று ஆய்வுகள் காட்டுகின்றன! இது இனிப்பான செய்தி தான்!

ஜப்பானில் சர்க்கரை நோய் அறிகுறி உள்ள 30 பேரைக் கூப்பிட்டார்கள். நல்ல சாப்பாடு! அது முடிந்த கையோடு கடும் அறுவையான ஓர் உரையைக் கேட்க வைத்தார்கள்! உரை முடிந்ததும் அவர்களுடைய இரத்தத்தில் சர்க்கரையின் அளவு நன்றாக எகிறியதாம்.

சில நாட்களுக்குப் பிறகு அவர்களை மீண்டும் கூப்பிட்டார்கள். அதேபோல் நல்ல சாப்பாடு! பின்னால் வயிறு குலுங்கச் சிரிக்கக் கூடிய ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியை அவர்கள் பார்த்தார்கள்!

உங்கள் ஊகம் சரிதான்! இப்போது அவர்கள் இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைந்திருந்தது!

எனவே சிரியுங்கள்! சர்க்கரை நோய் உள்ளவர்களையும் சிரிக்கச் சொல்லுங்கள்!

ஓர் எச்சரிக்கை!

சிரிப்பு ஓர் உதவிதான்! சிரிப்பே மருந்தாகிவிடாது!


நம்முடைய சர்க்கரை நண்பர்கள் சிரி சிரி என்ற சிரித்துக் கொண்டே மருந்தை நிறுத்திவிடப் போகிறார்கள்!

அதோடு உண்ணக் கூடாத உணவு வகைகளையும் ஒரு பிடி பிடித்துவிடப் போகிறார்கள்!

-ஆசிரியர்-

# 'தியாகி'

## அருட்பணி. விமல் அமதிஅடிகளின் ஐந்தாவது இறுவட்டு




அருட்பணி.விமல் அமதி அடிகளின் ஐந்தாவது இறுவட்டான 'தியாகி' கொழும்பு புனித லூசியாள் பேராலயபங்குமண்டபத்தில் 29.04.2012 அன்று வெளியிடப்பட்டது. இரங்குமையா, பயமில்லையே,தாயேதஞ்சம் நீயே. நல்லவரேஎன்ற இவரது இறுவட்டுக்களின் வரிசையில் இது ஐந்தாவதாகும். இலங்கை இந்தியகலைஞர்களின் கூட்டு முயற்சியாக இது வெளிவந்திருக்கிறது. பாடல் வரிகளையும் இசையினையும் நம்நாட்டுபடைப்பாளிகளான அருட்பணி. விமல் அமதி, அருட்பணி. தயாஅமதி, அருட்பணி. ஜோய் அமதி, அருட்பணி. பிலிப் அமதி, அமரர் அருட்பணி. அதிரியான்யோசப் அமதி, பேராசிரியர் S.J. யோகராஜா ஆகியோர் வடிவமைக்க இந்திய முன்னணிபாடகர்களான ஹரிஷ் ராகவேந்திரா, முகேஷ், Bபின்னி கிருஸ்ணகுமார்,ஹேமா ஜான், ரோஷினி, திவ்யா, ராமு, ஆனந் ஆகியோர் பாடியிருக்கிறார்கள். இந்த இறுவட்டானது இறை அழைத்தல் பறறிய பாடல்களையும் அமலமரித்தியாகிகள் சபையைப்பற்றிபாடல்களையும் தாங்கிருக்கிறது.

இந்த இறுவட்டு வெளியீட்டுவிழாவில் முதன்மை விருந்தினராக கொழும்பு வெள்ளவத்தை பங்குத்தந்தையும் கொழும்பு அமதிகள் மாகாண ஆலோசகருமான அருட்பணி. டீபொப் ரொட்றிக்கோ அமதி அடிகளும் சிறப்புவிருந்தினர்களாக தெமட்ட கொடபங்குத் தந்தையும் இறையியல் கல்வி தமிழ்ப்பிரிவின் இயக்குனருமான அருட்பணி. ரெஜினோலட் அமதி அடிகளும் கிராண்பாஸ் பங்குத்தந்தையும் கொழும்பு யோசப்வாஸ் மன்ற நிறுவுனருமான அருடபணி. ஆனந்துள்ளே அடிகள் மற்றும் களனிய பல் கலைக்கழக பேராசிரியர் S.J. யோகராஜா ஆகியோர் கலந்துசிறப்பித்தனர். ஏனைய உரைகளினை தேசிய திருவழிபாட்டு செயலரான அருட்பணி. இக்னேசியஸ் வர்ண குலசிங்கம்,கலாசுரபி கலையக நிறுவுனர் திரு. அம்புரோஸ் பீற்றர், யாழ் மாகாண அமலமரித்தியாகிகள் ஆலோசகர் அருட்பணி. ஜெறோம் அமதி ஆகியோர் வழங்கினர். நயப்புரையினை கிராண்பாஸ் புனித சூசையபபர் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர் ஜெயகாந்தன் அவர்கள் வழங்கினார். அத்தோடுகலாசுரபி கவின் கலைகள் பயிலக நடன ஆசிரியர் செல்வி. ஜொசிட்டாபீற்றர் மற்றும் அவரதுமாணவிகளினதும் சிறப்புநடனங்களுடன் விழா நிறைவெய்தியது.

# மாவட்ட மட்ட உதைபந்தாட்டம் சென். பற்றிக்ஸ் சம்பியன்ஸ்

மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி முதலிடத்தைப் பெற்று சம்பியனாகியது. முன்னதாக நடைபெற்ற யாழ் கோட்ட, யாழ் வலய மட்டப் போட்டிகளிலும் இவ்வணி சம்பியனாகியது குறிப்பிடத்தக்கது.



மாவட்ட நிலைப்போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது.

முதல் சுற்றில் வேலனை மத்திய கல்லூரியை 4-1 என்ற கோல் கணக்கிலும் வெற்றி கொண்டு கால் இறுதிச் சுற்றில் உரும்பிராய் இந்துக் கல்லூரியை 7-0 என்ற கோல் கணக்கில் இலகுவாய் வெற்றிகொண்டு அரையிறுதிச் சுற்றில் மானிப்பாய் இந்துக்கல்லூரியை விறுவிறுப்பான ஆட்டத்தில் 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி கொண்டுள்ளது.

இறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரியை 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு சம்பியன் பட்டத்தை பெற்றுக் கொண்டது. இவ்வணி எதிர்வரும் யூன் மாதம் வவுனியாவில் நடைபெறும் மாகாண மட்ட போட்டியில் கலந்து கொள்ளவுள்ளது என இவ்வணியின் பயிற்றுனர் திரு. ம. பேர்ட்டி பனிஸ்ரர் கூறினார்.

# "கவிதைத் தென்றல்" கௌரவம் பெறுகிறார்



கத்தோலிக்க கலை இலக்கிய வட்ட வெள்ளி விழா சிறப்பு நிகழ்வில் நவாலியூர் நாயகி அவர்களுக்கு "கவிதைத் தென்றல்" கௌரவப் பட்டத்தை அருட்பணி. ஜெ.பி.ஈ. செல்வராஜா அடிகளாரால் வழங்குகிறார்.

# நகர்ப்புற வாழ்க்கை ஒவ்வாமையை அதிகரிக்கிறது

இயற்கைச் சூழலை அனுபவிக்காத நகர்ப்புற வாழ்க்கை காரணமாக பலருக்கு ஒவ்வாமை ஏற்படுவதாக பின்லாந்து ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கின்றனர்.

மனிதர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய குறிப்பிட்டவகை நுண்ணுயிரிகள் நகர்ப்புறம் சாராத பசுமை சூழ்ந்த இயற்கைச் சூழலில் அதிகம் காணப்படுவதாகவும், அத்தகைய சூழலில் வாழும் மனிதர்களுக்கு ஒவ்வாமை குறைவாக இருப்பதாகவும் இந்த ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

அதேவேளையில், பசுமை சூழலற்ற நகர்ப் புறத்தில் வாழ்பவர்களுக்கு இத்தகைய நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளின் பயன் கிடைப்பதில்லை என்பதால் அத்தகையவர்கள் மத்தியில் ஒவ்வாமை அதிகரித்து காணப்படுவதாகவும் இந்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.


ஒவ்வாமை என்பது பல வகைப்படும். சிலருக்கு சில வகை உணவுகள் ஒவ்வாமையை தூண்டும். சிலருக்கு சிலவகை மருந்துகள் ஒவ்வாமையை தூண்டும். சிலருக்கு சிலவகை திரவங்களால் ஒவ்வாமை ஏற்படும். ஆனால் மனிதர்களில் ஒரு சிலருக்கு மட்டும் இந்த ஒவ்வாமை ஏன் ஏற்படுகிறது என்கிற அடிப்படை கேள்விக்கு மட்டும் நீண்ட நாட்களாகவே மருத்துவ ரீதியான உறுதியான விடை கிடைக்கவில்லை.

அத்தகைய ஆய்வு ஒன்றில் ஈடுபட்ட பின்லாந்து அறிவியலாளர்கள் தங்கள் ஆய்வின் முடிவுகளை அறிவியலுக்கான தேசிய இதழில் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த ஆய்வின் முடிவில், இவர்கள் நகர்வாழ் மக்களுக்கு இரண்டு பரிந்துரைகளை செய்திருக்கிறார்கள். நகர்வாழ் மக்கள் தங்கள் வாழ்விடங்களில் முடிந்தவரை பசுமைத்தாவரங்களை வளர்க்க வேண்டும் என்பதுடன், முடியும் போதெல்லாம் பசுமையான இயற்கை சூழலில் நேரத்தை செலவிடவேண்டும் என்பது இவர்களின் முதல் பரிந்துரை.

இரண்டாவதாக, நகரங்களைத் திட்டமிடும்போது பூங்காக்கள் மற்றும் பசுமை வெளிகளுக்கு இடங்களை ஒதுக்க வேண்டும் என்பது அவர்களின் இரண்டாவது பரிந்துரை.

# குருத்துவ பொன்விழா நாயகனை வாழ்த்துகின்றோம்



ஆண்டு 50 வரை அருட்பொழிவு குன்றா குருவே வாழ்க
அமல உற்பவ தாயாரின் மைந்தனே வாழ்க
அதிகாலையிலே அழைப்பினை செவிமடுப்பவரே வாழ்க
ஆண்டவர் யேசுவின் அடிச்சுவடே வாழ்க
அமைதியின் உருவமே குருவே வாழ்க
ஆம் இதோ வருகின்றேன் என்றவரே வாழ்க
அகதிகளை ஆதரிப்பவரே வாழ்க
ஆன்மீகத்திற்கு அமைதி கொடுப்பவரே வாழ்க
அயலவருடன் அன்பைப் பகிர்பவரே வாழ்க
ஆதரவு என அண்டியவரை அரவணைப்பவரே வாழ்க
அனைவர்க்காயும் செபிப்பவரே வாழ்க
அன்பிற்கு இலக்கணமானவரே வாழ்க
அன்னை தந்தையின் இறைவேண்டலில் உதித்தவரே வாழ்க
அன்புச் சகோதரர்களின் அரவணைப்பில் வளர்ந்தவரே வாழ்க
அறநெறியில் வாழ்ந்து காட்டுபவரே வாழ்க
அவனி எங்கும் இறைச் செய்தியை அறிவிப்பவரே வாழ்க
அறிவு புகட்டும் ஆசானே வாழ்க

அன்பு மாறாத அருட்பணி. P.P. பிலிப் அடிகளாரை அகமகிழ்ந்து வாழ்த்தும் P.P. அன்ரனி பிபியானா
P.P. பிறின்ஸ் யூலியானா
10, 2ம் குறுக்கு வீதி
பாசையூர்

Add: 49/12

# ஒவ்வொரு மனிதருக்கும் நற்செய்தியைப் பெறுவதற்கு உரிமை உள்ளது - திருதந்தை

நற்செய்தியின் தூதுவர்கள், தங்களது போதகரும் ஆண்டவரும் போல தொடர்ந்து நசுக்கப்பட்டு வந்தாலும், நற்செய்தி அறிவிப்புப் பணியில் திரு அவை துணிவை இழக்கக் கூடாது என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கேட்டுக் கொண்டார்.

பாப்பிறை மறை பரப்புக் கழகங்களின் 170 தேசிய இயக்குனர்களை கடந்த கிழமை திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, இந்த நற்செய்தி அறிவிப்புப் பணியில் தனது ஆதரவையும் தெரிவித்தார்.

பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் மாற்றங்கள் இடம் பெற்று வரும் இக்காலத்தில் மனிதர் மட்டும் தனிமையும் வேதனையையும் சோர்வையும் அனுபவிக்கின்றனர், நற்செய்தியின் தூதுவர்களும் தொடர்ந்து துன்பங்களை அனுபவிக்கின்றனர். என்றும் அவர் கூறினார்.

கிறிஸ்தவ வரலாற்றில், எண்ணற்ற மறைசாட்சிகள் எப்போதும் இருந்தும் வருகிறார்கள். நற்செய்தி அறிவிப்புப் பாதையில் இவர்களின் எண்ணிக்கையும் சாட்சியங்களும் இன்றியமையாதவைகள் என்றும் திருத்தந்தை கூறினார்.

உலகில் எப்போதும் அவசரத் தேவையாக இருக்கும் நற்செய்தி அறிவிப்புப்பணி, இக்காலத்தில் உலகின் துரிதப் பாதையோடு சென்று, கிறிஸ்துவை ஒவ்வொருவருக்கும் அறிவிக்கப்பட வேண்டியிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இன்றைய மறைப் பணியானது தனது நம்பிக்கையை இறைவனின் செயலில் வைதது, ஆழமான செபத்தில் ஈடுபடவும், தூய ஆவியின் வலிமையையும் ஒளியையும் இறைஞ்சுவதற்கு அழைப்பு விடுக்கின்றது என்றும் அவர் கூறினார்.

## உதைபபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மாவட்டத்தில் 2ம் இடம்

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் 15



வயது பிரிவினருக்கு நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 2ம் இடத்தை பெற்றுள்ளது.

## உலகெங்கும் பரவியுள்ள இயேசு....(1ம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்துள்ளவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

உலகெங்கும் பரவியுள்ள இயேசு சபையினர், 84மாநிலங்களாகவும், 15 சிறு பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டு செயற்படுகின்றனர். தெற்கு ஆசியப் பகுதிகளில பெருமளவாக, 4036பேர் இயேசு சபை உறுப்பினர்கள் என்றும், அதற்கு அடுத்தபடியாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் 2547பேர் உறுப்பினர்களாக உள்ளனர் என்றும் இந்தப் புள்ளிவிவரம் கூறுகிறது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.